Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

வெளியீடு-36 01 மார்ச் 2007 விலை:- 10.00

மிருக
பலத்துக்கும்
அநியாயத்துக்கும்
எதிரான
இறுதி
வெற்றி
மக்களுடையதாகவே
இருக்கும்.
சேகுவேரா

# தகரும் முகத்திரை

# தமிழர்கள் செய்யவேண்டியது என்ன

தமிழ் பாசிசத்தின் முகத்திரை கிழிந்து கொண்டிருக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். புலம பெயர்ந்த தளத்தில் உருவாகிய ஜனநாயக இடைவெளி, புலிகள் இயக்கத்தினுள் ஏற்பட்ட பிராந்திய ரீதியான நிர்ணயமான பிளவு,

ஜனநாயகத்திற்காக கால் நுற்றாண்டுகளாக தமிழ் ஜனநாயக சத்திகளும், மனித உரிமைவாதிகளும் நடத்திய இடையறாத போராட்டம், முஸ்லீம் மக்களுக்கெதிரான தாக்குதல்களும் வெளியேற்றமும் தொடர்பாக முஸ்லீம் மக்கள் மத்தியில் எழுந்த அதிருப்தி அலை, பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக தெற்கில் ஏற்பட்ட வெறுப்புணர்ச்சி, இந்தியாவிலும் உலகளாவிய அளவிலும் மனித குல விரோத பயங்கரவாதம் தொடர்பான புரிதலும், இராணுவ ரீதியான அடுத்தடுத்து ஏற்பட்டு வரும சரமாரியான சரிவுகளும் புலிகளை அம்பலப்படுத்தி நிற்கின்றன.

மனித குலத்தின் நியாயமான விடுதலையை நாடி நிற்கும் தார்மீக நெறிமுறைகளை கடைப்பிடிக்கும் சில ஆயுதமேந்திய இயக்கங்களே பல சந்தர்ப்பங்களில் தோல்வியைச் சந்தித்து விடுகின்றன. நிலைமை இவ்வாறிருக்கையில் புலிகளைப் போன்ற ஒரு கடைகெட்ட பாசிச இயக்கம் எவ்வாறு வரலாற்றில் தாக்கு பிடிக்கமுடியும்?.



கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் இடையறாத செல்வீச்சுக்கள், வான்தாக்குதல்கள் மத்தியில் இடம் பெயர்ந்த மக்கள் வாகரையை

தொடர்ச்சி 02ம் பக்கம்

# இடம் பெயர்ந்த மக்களின் திறந்த மடல்

மூதூர் வாகரைப்பகுதிகளில் இருந்து பாரிய செல்வீச்சுகளுக்கு இலக்காகி எங்கள் வீடு வாசல்கள் மற்றும் கால்நடைகள் உட்பட அசையும் அசையா சொத்துக்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளோம். பல இன்னல்களின் மத்தியில் உயிர் பிழைத்து அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றோம் அகதி முகாம்களில் 10-10 இடவசதி கொண்ட கொட்டில்களே எமக்கு வழங்கப்பட்டுள்ளது 10 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கும் இருப்பிடம் இவ்வளவே.

இக்கொட்டில்கள் கிடுகுகளாலும். படங்குகளாலும் அமைக்கப்பட்டுள்ளன. நிலம் மண்தரையாகவே உள்ளது. இந்த இருப்பிடங்கள் இங்குள்ள சூழலுக்கு பாதுகாப்பற்றவையாக. வாழமுடியாதவையாக உள்ளன சன நெருக்கடி. ஒரே அறையில் பலகுடும்பங்கள் போன்ற காரணங்களால் சமூகப்பிரச்சனைகள். கலச்சாரசீரழிவுகள் தலைதுக்கி நிற்கின்றன. அடிப்படை சுகாதார வசதிகள் போதாமையால் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது. மின் இணைப்புக்கள் போதிய அளவிலும் பாதுகாப்பாகவும் இல்லை. மின்சார

தொடர்ச்சி 03ம் பக்கம்





## தமிழர்களின் பிரதிநிதிகள் அனைவரும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றினைய வேண்டிய காலமிது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்~ பத்மநாபா

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இலங்கையின் சுதந்திர தின உரையில் நாட்டின் இனப்பிரச்சனை தொடர்பாக இலங்கையின் அனைத்து பகுதியினரும் கவனத்திற்கொள்ள வேண்டிய பெறுமதி வாய்ந்த கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அவர் ஆற்றிய உரையிலுள்ள பெரும்பான்மையான அம்சங்கள் குறித்து அவரை நாம் பாராட்டுவதோடு அவரது கருத்துக்கள் எமக்கு மன ஆறுதலையும் புதிய நம்பிக்கைகளையும் ஊட்டுவனவாக உள்ளன.

இலங்கையின் பெருவாரியான மக்கள் நீதியான அரசியற் தீர்வொன்றில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளதோடு, தெற்கின் சிங்களப் பிள்ளைகளின் முன்னேற்றம் தொடர்பாகவும், வடக்கு கிழக்கின் தமிழ்ப் பேசும் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாகவும் ஜனாதிபதி தமது அக்கறையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ள அதேவேளை இனப்பிரச்சனைக்கு அரசியற் தீர்வு காண்பதில் அவர் கொண்டுள்ள அக்கறையையும் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்திருக்கின்றமை அவர் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு இலங்கையின் அனைத்து மக்களின் நலன்களையும் கருத்திற் கொண்டதோர் அரசியற் தீர்வைத் தவிர வேறெந்தக் குறுக்குவழியும் கிடையாது என்பதை தெட்டத்தெளிவாக எடுத்துரைத்துள்ளார். எத்தகைய விலைகொடுத்தாயினும் நியாயமான அரசியற் தீர்வொன்றை எட்டுவதுவும் அதனடிப்படையில் சமாதானத்தை நிலைநாட்டுவதும் இலங்கையை பல்லினங்களின் தேசமாக மிளிரச்செய்வதுமே தம்முன்னாலுள்ள முதலும் முக்கியத்துவமான பணி என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமையை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி – பத்மநாபா மிகுந்த எதிர்பார்ப்புக்களுடனும் நம்பிக்கையுடனும் வரவேற்கிறது.

இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பாக அவர் தெரிவித்துள்ள கருத்தும். அனைத்து கட்சிகளினுடனான கலந்துரையாடல்கள் ஊடாக பேராசிரியர் திஸ்ஸவிதாரண அவர்கள் முன்வைத்த தீர்வு யோசனைகளும் அரசியல் நிபுணர்கள் முன்வைத்துள்ள ஆலோசனைகளும் ஆக்கபூர்வமானதொரு அரசியல் எதிர்காலத்தை சமிக்ஞை காட்டி நிற்கின்றன.

இறுதி மூச்சுவிடும் புலிப்பயங்கரவாதத்தை உயிர்ப்பிக்க முற்படுவது தமிழர்களுக்கு மேலும் அழிவான எதிர்காலத்தையே அதிகரிக்கும். அரசியற் தீர்வுக்காகவும் ·சமாதானத்துக்காகவும் ஏற்பட்டு வரும் ஆக்கபூர்வமான சூழ்நிலைமைகளைப் பலப்படுத்துவதிலும் அது தொடர்பாக தமிழர்கள் வழங்க வேண்டிய உரிய பங்களிப்புக்களை வழங்குவதிலும் தமிழர்களின் தலைவர்கள் அனைவரும் அக்கறை செலுத்துதல் வேண்டும்.

ஜனநாயக வழியில் நிற்கும் தமிழ்த் தலைவர்களின் கருத்துக்களை அக்கறையோடு செவிமடுத்து அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் தாம் கொண்டுள்ள ஈடுபாட்டைக் குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இணைந்து செயற்பட அழைப்பு விடுத்துள்ளார். தாம் புலிகளின் நலன்களுக்காக அல்ல, தமிழ் சமூகத்தின் நலன்களுக்காகத்தான் பாடுபடுகிறோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இப்போதாவது கருதுவார்களாக இருந்தால் ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று தமிழ் மக்களின் நலன்களிலிருந்து ஆக்கபூர்வமாக சிந்திக்க முன்வர வேண்டும். ஆக்கபூர்வமாக நடைபெற்று வரும் அரசியல் விடயங்களில் ஈடுபாடு காட்டுதல் வேண்டும்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நடைமுறையில் செயற்பட்டு வரும் அரங்கங்களில் தமிழர்களின் நலன்களுக்கான விடயங்களை உறுதிப்படுத்த தமிழர்களின் பிரதிநிதிகள் அனைவரும் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் ஒன்றிணைய வேண்டிய காலமிது. அரசியற் கட்சிகளின் பாராளுமன்றக் கமிட்டியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்ற முற்போக்கான சிங்கள அரசியற் தலைவர்களின் தீர்வு யோசனைகளை மேலும் செழுமைப்படுத்தவும் அவற்றை உண்மையில் நடைமுறையாக்குவதுவும் தமிழ்த் தலைவர்களின் மிக அவசியமான வரலாற்றுக் கடமையாகும்.

அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவான பல யு.என்.பி தலைவர்கள் இன்று ஜனாதிபதியோடு இணைந்திருக்கிறார்கள். அத்துடன் மலையகத் தலைவர்கள் அனைவரும் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் ஜனாதிபதியோடு கை கோர்த்து நிற்கின்றார்கள். இச்சந்தர்ப்பத்தை வாய்ப்பானதாகக் கருதி தமிழ்த் தலைவர்களும் தமிழர்களின் முன்னேற்றகரமான எதிர்காலத்துக்காக செயற்பட வேண்டுமெனக் கருதுகிறோம்.

தி. சிறிதரன்
பொதுச்செயலாளர்
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி – பத்மநாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## பயங்கரவாதி மானிட விரோதி

டெல்லி அருகே சம்புக்தா ரயில்குண்டு வெடிப்பும் ஹெப்பட்டிக்கொலாவ பஸ் பயணிகள் மீதான குண்டுத் தாக்குதலும் ஓரேவிதமான மன நிலை கொண்டவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. தங்கள் தமது பயங்கரவாத் வழியிலான அபிலாசைகளுக்காக சாதாரண பொதுமக்களைக் குரூரமாகக் கொன்றொழிப்பதே அது. பெப்ரவரி 20ந் திகதி டெல்லியிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்றுகொண்டிருந்த ரயிலினுள் குண்டுகளை வெடிக்கவைத்து அப்பாவிகளான பொதுமக்கள் 66 பேரின் உயிருக்கு உலை வைத்தார்கள். இதேபோல்தான் அனுராதபுரத்திற்கருகாமையில் பஸ்சில் பிரயாணம் செய்த அப்பாவிகளான கிராமவாசிகளை கொன்று தள்ளினார்கள்.

எப்போதும் அடிப்படைவாதிகள், பாசிசவாதிகள், பயங்கரவாதிகள் மக்களிடையே உறவு சௌபன்னியம் நிலவுவதை விரும்புவதில்லை. தென்னாசிய அளவில் ஒவ்வொரு நாடளவிலும் சமூகங்களிடையே ஐக்கியம் உருவாகுவதை அவர்கள் அறவே வெறுக்கிறார்கள்.

லண்டன், பாலித்தீவு, அமெரிக்கா, லெபனான், கென்யா, ஈராக் என உலகின் பல்வேறு பாகங்களிலும் சாதாரண மக்களை இலக்கு வைத்து பயங்கரவாத அடிப்படைவாத சக்திகள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வந்திருக்கின்றன.

இந்தியாவிலும், இலங்கையிலும் பயங்கரவாதத்தின் நாசகாரச் செயல்கள் அன்றாடம் என்றாகிவிட்டன.

மனித குலத்தின் விரோதிகளான இவர்களுக்கெதிரான நடவடிக்கைகள் உலகளாவிய அளவில் மேற்கொள்ளப்படவேண்டும். உலகின் வெவ்வேறு பிராந்திய மட்டங்களில் அந்த விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பினும் நடவடிக்கைகள் காலந் தாழ்த்தாமல் முன்னெடுக்கப்படவேண்டும்.

எந்தநிலையிலும் எக்காரணம் கொண்டும் அல்ஹைதா லஸ்கர்-ஐ-தொய்பா, தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புக்களின் பயங்கரவாதச் செயற்பாடுகள் சகித்துக்கொள்ள முடியாதவை. இவற்றுக்கெதிரான நடவடிக்கைகள் தயவு தாட்சணியமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாசிச பயங்கரவாத இயக்கங்கள் சாதாரண மக்களின் மீது மாத்திரமல்ல, அவர்களின் வாழ்வாதாரங்கள் மீதும் ஈவிரக்கமற்ற வகையில் தாக்குதல்களை மேற்கொள்கின்றன.

இலங்கையினுள்- இலங்கையைச் சுற்றியுள்ள கடல் பிரதேசம் போன்றவற்றில் அன்றாடம் புலிகளின் பயங்கரவாதச் செயல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதனால் மக்களின் சமூக, பொருளாதார, வாழ்வு பாரிய அளவில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. அச்சுறுத்தலுக்கும் அபாயத்திற்கும் உள்ளாகியுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கான வழிமுறைகள் கூட பயங்கரவாதிகளுக்கு உற்சாகமூட்டுவதாக அமையக் கூடாது.

தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகத்தை நேசிப்பவர்கள் உற்சாகமூட்டப்படவேண்டும். "தமிழ் ஜனநாயக சத்திகளும் இலங்கையின் அரசாங்கமும் தெற்கின் ஜனநாயக அரசியல் சத்திகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வை எட்டுதல்" என்ற முறையே ஊக்குவிக்கப்படவேண்டும்.

பயங்கரவாதம், உலகமானிடத்தால் வெறுத்தொதுக்கப்படுவது என்பது எப்போதும் உணர்த்தப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். இந்தியா, ஐரோப்பா, வட அமெரிக்க நாடுகளில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. சில நாடுகளில் அவர்களின் நிதி ஆதாரங்கள் முடக்கப்பட்டுள்ளன. பிராந்திய உலகளாவிய பயங்கரவாதத்தின் பாரதூரத்தன்மைக்கு இவையெல்லாம் போதியனவல்ல.

பயங்கரவாதிகளின் போக்குவரத்து, இருப்பு, பகிரங்கமான ஆதரவு, நிதிசேகரிப்பு, ஆயுதக்கடத்தல், போதைவஸ்துக் கடத்தல் இவற்றின் சூத்திரதாரிகளான முக்கிய பயங்கரவாதப் புள்ளிகள் இவர்களின் முதலீடுகள் சொத்துக்கள் தொடர்பான நடவடிக்கைளுடன் இவர்களின் பயங்கரவாதச் செயற்பாடுகளின் விளைநிலம் இவர்கள் பாதுகாப்பானதென கருதும் இடங்கள் எல்லாவற்றிலும் சாம, பேத, தான, தண்டமுறைகளில் செயற்பாடுகள் அமையவேண்டும். சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவு எய்ட்ஸ் போன்ற உயிர் கொல்லி நோய்கள் தொடர்பாக எத்தகைய கவலைகள் உண்டோ அத்தகைய கவலை பயங்கரவாதம் தொடர்பாகவும் இருக்க வேண்டும்

பயங்கரவாதம் சாதாரண மக்களின் வாழ்வில் பல்வேறு விதமான இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது. நவீன உலகின் ஆக்கபூர்வமான பலாபலன்களை மனித குலம் நுகர்வதில் இது தடைகளை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாகத் தொலை தொடர்புத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் போக்குவரத்து, யாத்திரை, தொழில்துறை,ஏற்றுமதி இறக்குமதி என பல்வேறு துறைகளிலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. உலகமானிடத்திற்கு அமைதியற்ற பதட்டமான வாழ்க்கையொன்றை நிரந்தரமாக்கியுள்ளது. மானிட அபிலாசைகளுக்கு விரோதமான இந்த பாசிச-அடிப்படைவாத-பயங்கரவாதம் பூமிப்பந்தில் இல்லாதொழிக்கப்படவேண்டும்.

நீதியானதும், சமாதானமும், மகிழ்ச்சியும் நிலவுவதான நம்பிக்கையூட்டும் எதிர்காலம் ஸ்தாபிக்கப்படவேண்டும் .

அகதிகளாக ஓயாத அலைவும், மரண பீதியும் என்று வாழ முடியாது. ஈழத்தமிழர்களின் உயிரழிப்புடன் கூடிய அலைக்கழிந்த வாழ்வில் புலிகள் வகிக்கும் பெரும் பங்கை நாம் மறுதலித்து விடமுடியாது . தமிழ் சமுதாயத்தின் வாழ்வு காயடிக்கப்பட்டதற்கும் எந்த ஒரு உருப்படியான தீர்வும் எட்டாக்கனியாகச் சென்றதற்கும் வெண்ணெய்திரளும் நேரம் தாளியை உடைக்கும் புலிகளின் பரந்துபட்ட வெகுசன நலன்களுக்கு விரோதமான செயற்பாடுகள் காரணமாய் அமைந்தன என்றால் அது மிகையல்ல.

எனவே சமூகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் போது அதில் அடிப்படைவாதிகளையும் பாசிச பயங்கரவாதிகளையும் புறத்தொதுக்கி ஜனநாயக சத்திகள் பரந்தளவில் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

## தகரும் முகத்திரை........

01ம் பக்கத் தொடர்ச்சி

தாண்டி தற்போது அரசுகட்டுப்பாட்டு பகுதிகளினுள் வந்து சேர்ந்து விட்டார்கள்.

இதே போன்றுதான் வன்னிக்குச் செல்லுமாறு புலிகள் நிர்பந்தித்த போதும், அழிச்சாட்டியம் பண்ணியபோதும் அதையெல்லாம் மீறி மக்கள யாழ்ப்பாணத்தில் தாம் வாழ்வதற்கான நிலைமைகளை தமது சுயசிந்தனையின் அடிப்படையில் தக்க வைத்துக் கொண்டார்கள்.

அரச கட்டுப்பாட்டு பகுதிகள் (பெருவாரியான தமிழ்மக்கள் வதியும் பகுதிகள்) பாதுகாப்பற்றவை என்ற நிலையை தமது கிளேமோர் மற்றும் பயங்கரவாத தாக்குதல்கள் மூலம் ஏற்படுத்தி மக்களை வன்னிக்குள் செறிவாக்க எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டன.

தற்போது கிளிநொச்சி உட்பட வன்னியின் சகல பகுதிகளிலும் மக்கள புலிகளின் பிடியில் இருந்து விடுபடுவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள். இதனால் தான் வன்னி வாழ் மக்களுக்கு மூக்கணாங்கயிறு மாட்டும் ஒரு நடவடிக்கையாய் புலிகள் அடையாள அட்டையை வழங்கினார்கள். பாருங்கள் நானும் மூக்கணாங்கயிற்றுடன் தான் நிற்கிறேன் என்பது போல் தலைவர் பிரபாகரனும் சம்பிரதாயத்திற்கு ஒரு அடையாள அட்டை பெறுவதாக புலிகளின் ஊடகங்கள் ஊடாக விளம்பரம் செய்திருந்தன. அதாவது புலிகளின் பகுதியில் சட்டத்தின் ஆட்சி நடப்பது போலவும், பிரபாகரனும் அந்த சட்டத்தின் ஆட்சிக்கு உடபட்டவர் போலவும சித்தரிக்க முயன்றனர். இதை விட மாய்மாலம் வேறொன்று இருக்கமுடியுமா?

வன்னியல் உள்ள மக்களும் வெளியேறத்தொடங்கி விட்டால் தனது எதிர்காலம் என்ன என்பதே அவருக்குள்ள பெருந்தலையிடியாகும். சொர்ணம் உட்பட அவரின தளபதிகள் கால்நூற்றாண்டு சரித்திரத்தில் இல்லாத அளவு ஆயுத இழப்பையும், அழிவையும் சந்தித்து தொப்பிகல காடு புகுந்த சம்பவங்களை விட இதுபோன்ற நிலை வன்னியில் ஏற்பட்டால் தான் என்ன செய்வது என்ற பிரச்சனை. ஊழ்வினைப் பயனை தான் அடையவேண்டி வருமோ, பாவத்தின் சம்பளம் வெகு சீக்கிரம் வழங்கப்பட்டு விடுமோ என அவர் அல்லலுறுகிறார். இது ஒன்றும் வேடிக்கையல்ல. பிரபாகரனின் சிந்தனை முறை அத்தகையது.

மிக நெருக்கடியான நிலைமைகளில் அவர் தன்னைப்பற்றியும் தன்குடும்பத்தை பற்றியுமே சிந்திப்பார். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பது போல் 2002 அரசுடனான யுத்த நிறுத்த உடன்படிக்கையை செவ்வனே பயன் படுத்தி பிள்ளைகள் சாள்ஸ் அன்ரனியையும், துவாரகாவையும் உயர்கல்வி கற்க மேற்குதேசம் அனுப்பவைக்கவில்லையா? பலே கில்லாடி! 2002 ஒப்பந்தத்தின் பெறு பேறு என்னவென்று சுருக்கமாகச் சொன்னால் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிள்ளைகள் உட்பட சிரேட்ட தலைவர்களின் பிள்ளைகளுக்கு மேற்குலக கல்விப்பேறு வாராது வந்துற்ற மாமணியாய் வாய்த்தது.

அப்பாவித் தமிழர்கள் பிள்ளைகளை உற்றசுற்றத்தை காவுகொடுத்து கால்நடைகள், வீடுகள், வயல்கள் எல்லாம் இழந்து திருவோடு ஏந்தி பிச்சாடனர்கள் போல் தெருவிற்கு வந்திருக்கிறார்கள். புலிகளின் தமிழீழப் போராட்டத்தின், பித்தலாட்டத்தின் பிழிசாரமிது.

பாசிசத்தின் தலைவனின் தர்பார் இவ்வாறிருக்க நாம் தமிழ் மக்களின் எதிர்காலம், இந்த நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்து செயற்படவேண்டியது அவசியம். குறிப்பாக தமிழர்களுக்கு ஜனநாயக சுதந்திர வாழ்வு கிட்டவேண்டும் இலங்கையை பல்லினங்களின் தேசமாக மாற்றுவதற்கான அடிப்படை சீர் திருத்தங்கள் இலங்கையின் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில் அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக பெரும்பான்மை நிபுணர் குழுவின் அறிக்கை (6 சிங்கள, 4 தமிழ், 1 முஸ்லீம்) பெருவாரியான ஜனநாயக, மனித உரிமை ஜனநாயக சத்திகளால் வரவேற்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் கூட்டத்தை நெறிப்படுத்திய பேராசிரியர் திஸ்ஸவிதாரண அவர்கள முன்வைத்த தீர்வு யோசனைகள் நிபுணர்குழுவின் அறிக்கையை ஒட்டியதாகவும் விரிவானதாகவும் அமைந்திருந்தது.

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான கலந்துரையாடல்களுக்கு இந்த யோசனைகள் ஒரு தெளிவான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கின்றன. இலங்கையின் தேசிய சமூகங்கள் குறிப்பாக தமிழர் தரப்பிலிருந்து இந்த யோசனைகளில் உள்ளடக்கபடவேண்டிய, திருத்தம் செய்யப்படவேண்டிய, தவிர்க்கப்படவேண்டிய விடயங்கள் பற்றி புரிந்துணர்வுடன் கூடிய கலந்துரையாடல்களை நடத்த வேண்டும்.

### இதற்கு ஜனநாயகத்தை மதிக்கும் தமிழர் தரப்பு தயாராக வேண்டும்.

தற்போதைய மனிதாபிமானப் பிரச்சனைகள், மனித உரிமை மீறல்கள், ஜனநாயகத்திற்கான இடைவெளி போன்றனவெல்லாம் இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு தொடர்பான எமது செயற்பாட்டின் அங்கங்களாகவே இருக்கும்.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்று நாம் வாழா இருந்து விடமுடியாது. எமது பிரச்சனைக்கு என்ன தீர்வு என்பது தொடர்பாக தமிழர்கள் தாம் அக்கறை செலுத்தியாக வேண்டும். சமகால உலகப்போக்குகள் மற்றும் புவிசார் சமூக,பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளில் தனி நாடு சாத்தியமானதுமல்ல. பொருத்தமானதுமல்ல. ஐக்கிய இலங்கைக்கு அதிக பட்ச அதிகாரங்களை இலங்கையின் தேசிய சமூகங்கள் அனைத்தும் சமத்துவமாக அனுபவிக்கும் சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்.

தென்னாசிய அளவில் நாங்கள் ஒன்று சேர்ந்து செயற்படுவது பற்றி சிந்திக்கும் காலத்தில் நான் ஒரு ஓட்டுக்குள் இருக்கப்போகிறேன் என்ற ஆமைச்சிந்தனையும், வேகமும் எமது சமூகம் சமகால உலகில் பீடு நடை போட சரிப்பட்டு வராது. எந்த வகைப்பட்ட இனத்துவ மேலாண்மை உணர்வுகளும் சிலர் அகங்கார அதிகாரத்தை சமூகத்தின் மேல் நிறுவிக் கொள்வதற்கான பத்தாம் பசலித்தனமான முயற்சிகளே.

எனவே இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான தற்போதைய சூழ்நிலை பயன்மிக்கதாக்கப்பட வேண்டும். அதற்கு தமிழர்கள் மத்தியில் விழிப்புணர்வு தேவை. கடந்த காலங்கள் போல் எல்லா சந்தர்ப்பங்களும் இழந்துவிட்டவையாகி விடக்கூடாது. இந்தியாவும், சர்வதேச சமூகமும் நிரந்தர தீர்வு தொடர்பில் தீவிர கரிசனை கொண்டுள்ளன. எனவே பாதிக்கப்பட்ட சமூகத்தினர் இதில் அக்கறை கொள்ளாமல் இருக்க முடியாது தீர்வு யோசனைகளில் என்ன இருக்கின்றன எமக்கு என்ன வேண்டும் என்பதை சொல்வதற்கும் நாம் தயாராக வேண்டும். தமிழர்கள் மத்தியில் இவற்றை கற்பதற்கும் என்னவேண்டும் என்று சொல்வதற்கும் இடைவெளி இல்லை என்பது உண்மையே. தமிழர்களுக்கு எத்தகைய தீர்வு உகந்தது என சிந்தித்து செயற்பட முற்பட்டதால் தான் நீலன் திருச்செல்வம் தற்கொலை குண்டுதாரியினால் படுகொலை செய்யப்பட்டார்.

தமிழர்கள் உதயனையும், சுடரொளியையும், ஈழநாதத்தையும் வாசித்தால் சரி வேறொன்றும் அவர்களின சிரசுக்குள் செல்லத் தேவையில்லை என்ற பாசிச சிந்தனையின் ஆதிக்கம் தமிழர்கள் அதிகாரப் பகிர்ந்தளிப்பு பற்றியோ அல்லது சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வெளியிடும் அறிக்கைள் பற்றியோ எதுவும் தெரிந்துகொள்ளக்கூடாது என்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தகவல் தொழில் நுட்ப யுகத்தில் வடக்கு - கிழக்கல் தமிழர்கள் வாசிக்க அனுமதிக்கப்பட்டவை உதயனும், சுடரொளியும், ஈழநாதமும் தான். பல சந்தர்ப்பங்களில் வீரகேசரியும் தினக்குரலும் உண்மையின் பெரும் தொகுதிகளுக்கான இடைவெளி இங்கு இல்லை. இது மிக அவலமானது. பாமரராய் விலங்குகளாய் பான்மை கெட்டு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். என்றாலும் இருள் விலக்கம் எம் அகத்திலும் நிகழ்ந்து கொண்டிருகிறது உணமையின் வெளிச்சக் கீற்றுக்கள் மெல்லக் தொடங்கியுள்ள நிரந்தரத் தீர்வொன்றிற்கான கருதுகோள்கள் உருவாக்கப்படுமானால் பெருவாரியான தமிழ்கள அதனை ஏற்புடையதாக கருதும் தரம அதற்கிருக்குமானால், அதுபற்றிய விழிப்புணர்ச்சி எம் மக்கள் மத்தியில் இருக்குமானால், அதுவும் உள்ளூரிலும புலம்பெயர்ந்த தளத்திலும் ஏற்படுமானால் தற்போதைய துன்பநிலையிலிருந்து மாறுபட்ட நமபிக்கையை தரும் வாழ்க்கை நிலையொன்றை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

தமிழர்கள் நாம் எப்போதும்- சதா காலமும் இவ்வாறு வாழப்போவதில்லை. ஆனால் தற்போதைய நிலையை மாற்றுவதற்கான பிரதான ஆற்றல் எம்மிடமே இருக்கிறது. அதனை நாம் பயன் படுத்த வேண்டும். தமிழர்கள் தமது சுபிட்சமான எதிர்காலத்திற்கான ஜனநாயக வாழ்வொன்றை கட்டியெழுப்பத் தயாராக வேண்டும். தம்மை பிடித்தபெரும் பிணியின் சகவாசத்தை துறந்துவிடத் தயாராக வேண்டும். நிகழ்வு ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது. வேகம் பிடிக்கவேண்டும்.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு மாநில சுயாட்சி கொண்டதாக இலங்கைக் குடியரசு அமைய வேண்டும்.

இலங்கையில் கொழுந்து விட்டு எரியும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இங்கு சமாதானம் மலர்ந்து அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் ஒருமுகமாக இணைந்து தேச, சமூக, பொருளாதார முன்னேற்றங்களுக்காக உழைக்க வேண்டும் என்பதே எனது மனமார்ந்த உடனடி விருப்பமாகும்.

மிகப்பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியற் தீர்வு வேண்டும் எனக் கோரி நிற்கின்றனர். மாகாண சபைகளுக்கு எந்தளவு அதிகாரங்களைப் பகிர்ந்தாயினும் இலங்கையைப் பிளவு படுத்தாமல் ஓர் அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் எனப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் கோருகின்றனர்.

இந்தியாவும் சர்வதேச சமூகமும், சமஷ்டி அடிப்படையிலோ அல்லது அதற்கு அண்மித்த அமைப்பு வடிவிலோ பரஸ்பரம் அனைத்து சமூகங்களும் சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும் வாழும் வகையில் அதிகாரங்களைப் பகிரும் ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என தெளிவாகத் தத்தமது நிலைப்பாட்டைத் தெரிவித்து வருகின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒன்றுபட்ட இலங்கையைப் பிளவு படுத்தாத வகையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கு தமது ஆட்சி தயாரென மீண்டும் மீண்டும் கூறிவருகின்றார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் சமஷ்டி அமைப்பு முறை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமது கட்சி முயலும் என்கிறார்.

ஓர் அரசியற் தீர்வுக்கு உண்மையில் எவையெல்லாம் அவசியமோ அவையெல்லாம் தயாராகவே உள்ளன. ஆனால் புலிகளின் பயங்கரவாத நடவடிககைகளையும் புலிகளின் பிடிவாதமான பிரிவினை நிலைப்பாட்டையும் காரணம் காட்டி இலங்கையின் இரு பெரும் கட்சிகளும் அரசியற் தீர்வுக்கான முன்னெடுப்புக்களை பின்தள்ளிப் போட்டு வருகின்றமை அவற்றின் உண்மையான உள்ளார்ந்த நோக்கங்கள் பற்றிய சந்தேகங்களையே வலுப்படுத்தி வருகின்றன.

இந்தக் கட்சிகள் சிங்கள இனவாதிகளையும், புலிகளின் பயங்கரவாதத்தையும் காரணங்களாகக் காட்டுவது இலங்கையை மேலும் மேலும் துன்பத்துக்கும் இழபபுக்களுக்குமே இட்டுச் செல்லும். அரசியற் தீர்வினை நாட்டின் அரசியல் அமைப்பாக்குவதற்கு நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஒப்புதலே பிரதானமானதாகும். இரண்டு பெரும் சிங்களக் கட்சிகளும் உண்மையாகச் செயற்பட்டால் அதனை மிகச் சுலபமாக நிறைவேற்ற முடியும்.

புலிகள் ஏற்கும் ஓர் அரசியற் தீர்வுதான் சாத்தியமென்றால் சிங்களத் தலைவர்கள் புலிகளுக்கு தனி நாடொன்றை வழங்குவதற்கு தயாராக இருக்க வேண்டும். புலிகள் வேறொரு அரசியற் தீர்வையும் முன்வைக்கவும மாட்டார்கள், ஏற்கவும் மாட்டார்கள் என்பதுதான் உண்மை. புலிகள் ஏற்பது அல்லது ஏற்காதது ஒருபுறமிருக்க அதற்கு முதலில் தமிழ் ஜனநாயக சக்திகளும், இந்தியாவும் மற்றும் இலங்கையின் சமாதானத்தின் மீது அக்கறை கொண்ட சர்வதேச சமூகங்கழும் நியாயமானதென ஏற்கக் கூடிய ஓர் அரசியற் தீர்வை இலங்கை அரசாங்கமும், எதிர்க்கட்சியும் ஒரு முகமாக ஆக்கி நாடாளுமன்றத்தில் அரசியல் யாப்பாக ஆக்க வேண்டும். அதன் பின்னரே. புலிகளின் ஒத்துழைப்பை அல்லது பலிகளின் திருத்தங்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். முதலில் பிரதானமான சிங்களக் கட்சிகளின் தலைவர்கள் தமது நியாயங்களையும நேர்மையையும் இலங்கை மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் நிலைநிறுத்தல் வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினையின் தோற்றத்துக்கும் அது தொடர்ச்சியாகக் கூர்மையடைந்ததற்கும் 1931ம் ஆண்டு இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட சர்வசன வாக்கெடுப்பு தொடங்கி எழுபது ஆண்டுகளுக்கு மேலாக சிங்களத் தலைவர்கள் மேற்கொண்ட இனவாத ரீதியான நடவடிக்கைகளும், 1970கள் மற்றும் 1980களில் தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதமுமே மூல காரணங்களாகும். சிங்கள இனவாத ஆதிக்கம் கொண்ட இலங்கையின் அரசியல் அமைப்புக்களுக்கும், தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படை நலன்களுக்கும இடையில் வளர்ச்சியடைந்த முரண்பாடுகளே இன்றைய நிலைமைகள் வளர்ச்சியடைவதற்கான அடித்தளம் என்பதை புரிந்து கொள்வது மிக அவசியமாகும்.

புலிப் பயங்கரவாதமும் அதன் விரிவாக்கமும் வளர்ச்சியடைந்த இன முரண்பாட்டின் கிளை விளைவாகும். புலிப்பயங்கரவாதமும் இன்று தமிழர்களின் நலன்களுக்கு எதிரானதாகவே வளர்ந்துள்ளது. இந்நிலையில், அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மாறாக அனைத்துக்கும் புலிகளை முன்னிலைப் படுத்துவதும், தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்கு புலிகளின் ஒப்புதலைப் பெற்றால் மட்டும் போதியது என முயற்சிப்பதுவும் சரியான அணுகுமுறையாகாது.

1987ம் ஆண்டு இந்திய-இலங்கை சமாதான உடன்பாடு ஏற்பட்ட போது அதனை வெற்றிகரமாக்குவதற்கு சிறிலங்கா ஆட்சியாளர் களினதும், புலிகளினதும் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே இந்தியா முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் இவை இரண்டும் தனித்தனியாகவும், கூட்டாகவும் மேற்கொண்ட சதிகாரத்தனமான நடவடிக்கைகள் இந்தியாவை பெரும் தர்ம சங்கடத்தில் மாட்டின.

இவ்வேளையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எல்லா வகையான சங்கடங்களுக்கு மத்தியிலும் ஓரளவு பலமான சக்தியாக நின்று இந்தியாவின் முயற்சிகளுக்கு உறுதுணையாக செயற்பட்டது. அதற்காக சுமார் 1000 தோழர்களைத் தியாகம் செய்தது. அந்தத் தியாகங்களுக்கும் துணிச்சலான முயற்சிகளுக்கும் சிறிலங்கா அரசோ, பிரதானமான தமிழக அரசியற் தலைவர்களோ, அல்லது சர்வதேச சமூகங்களோ உரிய ஆதரவும் ஒத்துழைப்பும வழங்காததனால் எல்லாம் வீணாகிப் போயின.

2002ம் ஆண்டு சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தமானது தமிழாகள் மத்தியில் இருந்த மாற்று அரசியற் சக்திகளை மிகவும் பலவீனப்படுத்தி விட்டது. எவ்வாறாயினும் 'எப்போதும் இல்லை என்பதை விட காலதாமதமாயினும் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்' என்ற பழமொழிக்கிணங்க இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை காண்பதில சிறிலங்கா அரசும், எதிர்க்கட்சியும், இந்திய அரசும், சர்வதேச சமூகங்களும் உடனடியாக உரிய அணுகுமுறையுடன் விரைந்து செயற்பட வேண்டும் என விரும்புகிறேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அரசியற் தீர்வுக்கு சாத்தியமான சிபார்சுகளை வரைவதற்காக அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவொன்றையும் அத்துடன் நிபுணாகள் குழுவொன்றையும் நியமித்துள்ளார். இக்குழுக்கள் ஓரளவு சிறப்பாக செயற்பட்டு வருவதாக அறிகின்றேன். இக்குழக்களில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களை நான் நேரடியாக அறிவேன். பலர் மிகவும் முற்போக்கான ஜனநாயகவாதிகள், சமஷ்டி அமைப்பின் மீது நம்பிக்கை கொண்டவர்கள், தமிழ்மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்கள் என்பதால் அவர்கள் பிரதானமான



விடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ள வகையில் ஒரு நியாயமான அரசியல் தீர்வுத்திட்டத்தை காலதாமதமின்றி வெளிக்கொணர்வார்கள் என நம்புகிறேன். ஜனாதிபதி அவர்களும் இக்குழுக்களினூடாக வெளிப்படும் திட்டத்தை சகல கட்சிகளுடனும் பேசி அரசியல் யாப்பாக ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் விரைவில் எடுப்பதாக அறிவித்துள்ளார். இவையெல்லாம் தற்போதைக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக உள்ளன.

ஏவ்வாறாயினும், இவ்வாறான முயற்சிகள் கடந்தகாலத்திலும் உச்சமட்ட நம்பிக்கைகளை உருவாக்கி பின்னர் ஒன்றுமே இல்லை என்று போனதை பல தடவை நாம் கண்டு ஏமாந்து போயுள்ளோம். இலங்கையின கடந்த எழுபத்தைந்து வருட அரசியல் வளர்ச்சி முறையானது இலங்கையின் பிரதான அரசியற் பிரச்சினைகளைத் தானே தீர்ப்பதற்கான அரசியற் பொறிமுறைகளை வளர்த்துக் கொள்ளவில்லை.

இலங்கையின் தேசியத் தலைவர்கள் மீண்டும் மீண்டும் இனவாதிகளினதும், அதிதீவிரவாதிகளினதும் அழுத்தங்களுக்குப் பணிந்து உரிய நேரத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறினர். இதனால் இலங்கையின் இனப்பிரச்சினை இந்தக் கண்டத்தின் பிரச்சினையாகி இப்போது சர்வதேச நாடுகளின் பிரச்சினையாகி விட்டது. இந்தியா மட்டும் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவ முன்வந்தபோது இலங்கையின் அரசியல் அமைப்பானது அதன் தலைவர்களை சரியான உணர்வுகளுடன் தானாகக் கிடைத்த வாய்ப்பை செயற்படவிடாது தடுத்து விட்டது. அப்போதைய அமைச்சர்களும், இறந்து போன அமைச்சர்களின் மகன்களும் இப்போது தாங்களும் தங்கள் தந்தையர்களும் நாட்டுக்கும் மக்களுக்கும் இழைத்த பாரதூரமான தவறுகளுக்கு இந்தியாவிடம் மறைமுகமாக மன்னிப்புக் கேட்கின்றார்கள். இதற்கு அவர்களுக்கு இருபது வருடங்கள் தேவைப்பட்டிருக்கிறது.

இன்னமும் கூட பிரதானமான கட்சிகளில் உள்ள பல சிங்களத் தலைவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக குறுகிய சிந்தனைகளையே கொண்டிருக்கின்றனர் - சிங்கள மையமாகவே சிந்திக்கின்றனர் - பிரச்சினைகளின் மீது ஒரு சிங்கள வெற்றியை நிலைநாட்டிக் கொண்டால் மீண்டும் சிங்கள ஆதிக்கத்தை நிரந்தரமாக நிலைநாட்டிக் கொள்ளலாம் என்ற கற்பிதத்திலேயே உள்ளனர் - இவர்கள் தமது கடந்த தலைமுறையினதும், தமதும் தவறுகளுக்கு திருத்தங்கள் செய்யும் ஏற்பாடுகளிலோ அல்லது சமத்துவம், சகோதரத்துவம், உண்மையான மக்களாட்சி என்ற அரசியல் விழுமியங்கள் மீது நாட்டைக்கட்டியெழுப்ப வேண்டும் என்ற அபிலாஷையோ இவர்களிடம் இல்லை.

இதனாலேயே, இனமுரண்பாட்டின் ஊடாக மேலும் மேலும் சிக்கலடைந்த நிலைமைகள் இப்போது இன வேறுபாடுகள் சித்தாந்த வேறுபாடுகளுக்கப்பால் இலங்கையின் அனைத்துக் கட்சிகளையும் இந்தியாவின் நேரடி ஈடுபாட்டைக் கோரி கதறி நிற்க வைத்துள்ளது. அது மட்டுமல்லாது அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே, பெல்ஜியம், டென்மார்க் சுவிற்சர்லாந்து, யப்பான், சீனா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா என ஒரு நீண்ட பட்டியல் நாடுகள் இலங்கையில் விசேட தூதுவர் மற்றும் விசேட பிரிவு என அமைத்து களமிறங்கி முகாமிட்டுள்ளன.

இலங்கையின் தற்போதைய நிலைமை என்னவென்வில், இலங்கையின ஜனநாயக மற்றும் முற்போக்கான தலைவர்கள் எவவளவுதான் நேர்மையாக முயற்சித்தாலும் ஒரு முழுமையான அரசியற் தீர்வுத் திட்டத்தை வெற்றிகரமாக உருவாக்குவதற்கும், அதனைப் பூரணமாக நடைமுறையாக்குவதற்கும் இந்தியாவினதும், பிரதானமான சர்வதேச நாடுகளினதும் அக்கறையுடனான ஈடுபாடும் மனமார்ந்த ஒத்துழைப்பும் அவசியமாகும்.

மேலும், தமிழர்கள் மத்தியிலுள்ள தமிழ் ஜனநாயக சக்திகள் மிகவும் பலவீனப்படுத்தப்பட்டும், மிகவும் சிரமமான சூழலுக்குள் அகப்பட்டிருப்பதனால், இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஒரு நியாயமான அரசியற் தீர்வொன்றினை சிறிலங்கா அரசு உருவாக்குவதற்கும் அதனை நடைமுறையாக்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை தமிழகத்தின் மாண்பமிகு முதல்வர் அவர்களும், கௌரவ எதிர்க்கட்சித் தலைவரும், தமிழகத்தின் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் ஒருநிலைப்பாட்டின் அடிப்படையில் முயற்சிக்க வேண்டும் என்பது எனது பெருவிருப்பமாகும்.

***இப்பத்தி வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஈ.பி.ஆர்.எல்.எப- பத்மநாபா அமைப்பின் சிரேஸ்ட தலைவருமான அ. வரதராஜப்பெருமாள் அவர்களால் வரையப்பட்டது. 2006 டிசம்பரில் வெளி வந்த சண்டே இந்தியாவில் இடம் பெற்றது.***

## இடம் பெயர்ந்த மக்களின் திறந்த.......

01ம் பக்கத் தொடர்ச்சி

இணைப்புகள் சீராக பொருத்தப்படாமையினால் தென்னை ஓலைகளாலும் படங்குகளினாலும் அமைக்கப்பட்டுள்ள நாம் உயிரை தக்க வைத்துக்கொண்டிருக்கும் கொட்டில்கள் தீப்பிடிக்கும் அபாயத்தில் உள்ளன. மின்சார இணைப்புக்கள் சீராக பொருத்தப்படாமையினால் அண்மையில் தாழங்குடா அகதிமுகமில் படங்கினால் வேயப்பட்ட ஒரு கொட்டில் தீப்பிடித்து எரிந்து. ஒரு பிள்ளை இறந்ததுடன் அதன் தந்தையும் தீக் காயங்களுக்கு உள்ளானார்.

நாங்கள் வாகரைப் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்தபோது உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகள் விடயத்தில் மிகப்பாரிய நெருக்கடியை எதிர் கொண்டோம் பின்பு மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்கு வந்தபின் ஆரம்பத்தில் சமைத்த உணவு வழங்கப்பட்டது. தற்போழுது எங்களுக்கு உலர் உணவு வழங்கப்படுகின்றது. தனித்தனியாகவே சமையல் செய்கின்றோம் எமக்கு சமையல் பாத்திரங்கள். பாய்கள் வாளிகள் போன்ற பொருட்கள் பொது நிறுவனங்களால் வழங்கப்பட்டன.

பொது நிறுவனங்கள் எம்மைப் [illegible] உணர்கின்றோம். அரசின் உதவியோடு உலக உணவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பருப்பு வகைகள் தொடர்ந்து தரமற்றதாக கணப்படுகின்றது. இதற்குப்பதிலாக கடலை கௌபி. பயறு போன்றவற்றை வழங்குமாறு கோரியுள்ளோம்.

உலர் உணவு பெறும் மக்கள் மிளாய் தேங்காய் காய்கறிகள் போன்ற உப உணவுப் பொருட்களைப் பெற பணமின்றி மிகவும் கஷ்ட நிலையில் உள்ளனர். எனவே மாதாந்த உலர் உணவு வழங்கப்படும்பொழுது இவ்வாறான உபஉணவுப் பொருட்களைப் பெறுவதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு சிறு தொகைப்பணம் வழங்கப்பட்டால் மிகவும் உதவியாக இருக்கும். அல்லது தொழில் வாய்ப்பை எற்படுத்திக்கொடுத்தால் இவ் உப உணவுப் பொருட்களை வாங்குவதற்கான வருமானத்தை நாங்களே தேடிக் கொள்ள ஏதுவாகும்.

ஐ.சி.ஆர்.சி ஒரு தடவைமத்திரம் பணமாக ஒரு நபரிக்கு 500 ரூபாவை வழங்கினர். இதன் பின்னர் வேறெந்த கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. வன்செயல் காரணமாக பொதுமக்களின் உயிர் இழப்புகள் சம்பந்தமாகவும். உரிய ஆவனங்களைப் பெறவும் (மரண அத்தாட்சிப்பத்திரம்) நியாயமான நஷ்ட ஈடுகளைப் பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ் வன்செயல் காரணமாக காயப்பட்டோர் இழப்பீட்டை பெறுவதற்கும் ஆவன செய்ய வேண்டும். நாங்கள் இடம்பெயர்ந்த போது எம் உயிர்களை மட்டுமே காப்பாற்றுவதற்காக எமது வீடுவாசல் அசையும் அசையாச்சொத்துக்கள் கால்நடைகள். தோட்டம் துரவுகள் போன்ற அனைத்தையும் இழந்து இடம் பெயர்ந்தோம்.

ஏம்மை மீண்டும் ஏமது பிரதேசத்தில் மீளக் குடியமர்த்துவதுடன் பாதுகாப்பு புனர்நிர்மாணம். புனரமைப்பு மற்றும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளவும் வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவை அனைத்திலும் முக்கியமான ஒரு வேண்டுகோளாக நாங்கள் கேட்டுக்கொள்வது யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரும் பொதுமக்களாகிய எங்கள் மீது அக்கறைகொண்டு இப்பாரிய அழிவில் இருந்து எம்மைமீட்டு நிம்மதியாகவும் சுபிட்சமாகவும் வாழவும் நாங்களே எங்கள் வாழ்க்கையை சீரமைத்துக் கொள்ளவும் வழிசெய்ய வேண்டும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இளைஞனின் மரண சாசனம்

புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு யுத்தப் பயிற்சியளிக்கப்பட்டு வாகரை சண்டையில் பலிகொள்ளப்பட்ட தமிழ் இளைஞனின் மென்மையான உணர்வுகள் அவனது உயிரற்ற உடலில் மூடியிருந்த கோல உடையின் சட்டைப் பையிலிருந்து படையினரால் மீட்கப் பட்டது. வெவ்வேறு இணையத் தளங்கள் இக் கடிதத்தை மீள்பிரசுரம் செய்திருக்கின்றன.

மென்மையான மானிட உணர்வுகளூடாக இக்கடிதம் எமது சமூகத்தின் அவலத்தை சுட்டிநிற்கிறது. இந்த இரு பக்க கடிதம் ஒரு அமரத்துவமான இலக்கியம். மனித உரிமைகள் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் ஆயிரம் கேள்விகளை இக் கடிதம் எழுப்புகிறது. புலிகளால் பயிற்சிக்கென கடத்திச்செல்லப்பட்டு, அபாயத்தின் விளிம்பில் நிறுத்தப்பட்டு பலிகொள்ளப் பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியரின், இளைஞர், யுவதிகளின் மனசாட்சியின் குரலாக ஒலித்து நிற்கிறது.

"கிணற்றடி வைரவருக்கு செவ்வரத்தம் பூ வைக்கும் அம்மாவுக்கு சொல்லு நம்பிக்கைத்தரும் சொற்கள் பஞ்சாங்கத்தில் இல்லையென்று"

"வாழவே பிறந்தோம் மூக்கும் முழியுமாய் வாழவே பிறந்தோம்" என 80களின் முற்பகுதியிலும், நடுப்பகுதியிலும் சேரன், ஜெயபாலன் போன்ற கவிஞர்களின் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிரான வரிகளைத் தாண்டி எலும்பும், தசையும், உணர்வும் கலந்த அனுபவமாக தமிழ்ச் சமூகம் சந்தித்துக்கொண்டிருக்கும் இன்னொரு அடக்குமுறையின் பேரவலத்தை இக்கடித வரிகள் தமிழ் பாசிசத்தின் கொடூரத்தை மௌனமாக பறைசாற்றி நிற்கிறது.

"02.11.2006 அன்று நானும் சுகுணராஜ்யும் நகைக்கடை விட்டு அனுஜனின் குடிபுகுந்த வீட்டுக்கு ஒரு சாமான் வாங்கிவிட்டு அன்று மாலை 6.50 மணியளவில் சுகுணராஜ்மின் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தேன். அதே சமயம் ஒரு அண்ணன் கூப்பிட்டு வெருட்டி 3 பேர் எங்களை ஆற்றால் கொண்டு எங்கேயோ கொண்டு சென்றார்கள். பின்புதான் எனக்கு விளங்கியது இயக்கத்துக்கு வந்துள்ளேன் என்று".

"12.01.2007 அன்று இந்த மடலை எழுதுகிறேன் இக்கடிதம் கிடைத்தவுடன் நீங்கள் மனம் தளராமல் வாசிக்க வேண்டும். நீங்கள் கவலைப்பட வேண்டாம். எல்லாம் விதிப்படி நடக்கும். நான் உங்களை எல்லாம் நினைத்து செத்துக் கொண்டிருக்கிறேன்".

"மேலும் சித்தி சித்தப்பா பிள்ளைகள் மாமி மாமா பிள்ளைகள் அக்கா அத்தான் பிள்ளைகள் மறக்காமல் சுகுணா சித்தி தில்லேஸ்வரன் சித்தப்பா பிள்ளைகள் அனைவருக்கும் சுகம் கேட்டதாக சொல்லவும் ரிஷா அக்கா டிலோ நல்லா பழகிய நண்பிகள் கீதா அனைவரிடமும் அம்மம்மா அப்பப்பா எல்லோரிடமும் சுகம் கேட்டதாக சொல்லவும் எல்லோரையும் சந்தோஷமாக இருக்கச் சொல்லவும். இயலும் என்றால் களுதாவளை பிள்ளையார் கோயிலில் ஒரு பூசை செய்யவும். நான் வந்தால் பெரிய பூசை செய்வோம்".


"எனது உயிர் நிச்சயமில்லை. இத்துடன் இம்மடலை முடிக்கிறேன். இனி நடப்பது எனக்குத் தெரியாது. இறைவன் கையில் உள்ளது. இவ்வாறு மாட்டிக்கொண்டிருக்கிறோம்".

*இந்த கடிதத்தின் கனதியான சில வரிகள் இவை.*

தமிழர்களின் தேசிய விடுதலைக்கான போராட்டம் எத்தகைய ஒரு சிதைவியக்கமாக மாற்றபட்டது என்பதையும், இங்கு மக்களின் வாழ்வு எவ்வாறு காயடிக்கபட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் ஆபத்தின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருப்பதையும் சாமான்ய மனிதர்களாகக்கூட வாழ முடியாதளவிற்கு தமிழ் பாசிசம் தனது அதிகார அகங்காரத்தை பிரகடனப்படுத்தியிருக்கிறது என்பதையும் தனது மரண சாட்சியத்தின் மூலம் சந்திரசேகரம் வினோத்காந், கடற்கரைவீதி, குருக்கல் மடத்தைச் சேர்ந்த அந்த இளைஞன் உரைத்துச் சென்றிருக்கிறான்.

கடவுள்தான் தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்று 70 களின் முற்பகுதியில் தந்தை செல்வா சொன்னதை பலரும் பல கட்டங்களில் உரைத்தும் எழுதியும் வந்திருக்கிறார்கள்.

நிர்க்கதியான நிலையில் இந்த இளைஞன் களுதாவளை பிள்ளையாரிடம் தனது வாழ்வுககான நிராசையான எதிர்பார்ப்பை தெரிவித்திருந்தான். தந்தை செல்வாவின் வார்த்தைகளை விட சந்திரசேகரம், வனோத்காந்தின் கடித வார்த்தைகள் வலுவானவை.



சமூகத்தில் ஈவிரக்கம் எதுவும் மிஞ்சவில்லையென்று அவன் நொந்து போயிருந்தான். சமூகம் மீதான அவனது விமர்சனமாகவும் இக்கடிதம் அமைகிறது.

30களின் பிற்பகுதியிலோ 40களின் முற்பகுதியிலோ நாஜி சித்திரவதை முகாமில் கொல்லப்பட்ட ஜூலியஸ் பூசிக் என்ற செக்கோசுலோவாக்கிய . கம்யூனிஸ்ட் தனது சித்திரவதைபட்ட வாழ்க்கையின் போது நாஜி சிறையில் தனது அனுபவங்களை நாளாந்தம் ரகசியமாக எழுதி வந்திருந்தார். அவை பின்னர் மீட்டெடுக்கப்பட்டு புகழ்பெற்ற தூக்குமேடை குறிப்பு என்ற நூலாக வெளிவந்தது.

நாஜிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி நெதர்லாந்தில் தலைமறைவாக வாழ்ந்த யூதக் குடும்பமொன்றின் சிறுமி அன்னிபிராங்கின் டயறி உலகப் பிரசித்தமானது. இந்தச் சிறுமி நாஜி வதை முகாம் ஒன்றில் பின்னர் உயிரிழந்தாள்.

தனது உலகத்தை, கெடுபிடியான வாழ்க்கையை – சமூக நிலைமைகள் பற்றிய விமர்சனத்தை அச்சிறுமி முன்வைத்திருந்தாள். இந்த டயறி இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முடிவில் கண்டு பிடிக்கப்பட்டது.

இங்கும் "எரிந்து கொண்டிருக்கும் தேசத்தில் இருந்து புத்தியுள்ள மனிதர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்" என்று புலிகளால் படுகொலை செய்யப் பட்ட பேராசிரியர் ரஜனி திரணகம தனது முறிந்தபனை நூலில் எம் சமூக அவலத்தை சுட்டியிருந்தார்.

"எம் வாய் திறப்பதெல்லாம் உண்பதற்கும், குடிப்பதற்கும் மாத்திரம் தான்" என்பதை பின்னர் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட சிவரமணி தனது கவிதை வரிகளில் சுட்டியிருந்தார்.

இங்கு மிகச் சாதாரணமான கடை ஊழியனான வினோத்காந் எமது சமூகத்தின் அவலத்தையும் அதில் ஒரு அங்கமான தனது நிலையினையும் அவலமான முறையில் தான் மரணத்தை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டதையும் அந்த இரு பக்கக் கடிதத்தில் குறித்துரைத்து நிற்கிறான்.

எல்லாவற்றையும் விட மனித வாழ்வு மகத்தானது என்பதை தனது வரிகள் மூலம் உணர்த்துகிறான். சமூகம் ஒரு பொறியினுள் அகப்பட்டிருப்பதை மாட்டிக்கொண்டிருக்கிறோம் என்ற வார்த்தையினூடு உரைக்கிறான். சுனாமி, தேசிய ஒடுக்குமுறை, தமிழ் பாசிசத்தின் ஜனநாயக மனித உரிமை நிராகரிப்பு என்பன இங்கு அடக்கமாகின்றன.

இந்த மரண சாசனமான ஒரு சராசரி இளைஞனின் கடிதம் இந்த கால்நூற்றாண்டுகளின் மகத்தான படைப்புக்களில் ஒன்று என்பதில் எந்தத் தவறுமில்லை.

கார்ல்மார்க்ஸ் என்ன சொன்னார், பூக்கோ என்ன சொன்னார் என்பதை ஆராயும் நாம் இந்த சாமான்ய இளைஞனின் மரண சாசனம் என்ன சொல்கிறது என்பதையும் விரிவாக ஆராய வேணடும்.

***அகதிதமிழன***

# கிழக்கில் புலிகளின் சரமாரியான சரிவு

கடந்த ஜூலை மாதத்தில் மாவிலாற்று தண்ணீரை புலிகள் மறித்ததில் இருந்து இன்றுவரை புலிகள் சரமாரியான சரிவுகளை சந்தித்து வருகிறார்கள். புலிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளங்கள் என சொல்லப்பட்ட சம்பூர், வாகரை ஆகிய பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது என்ற கதை இறந்தகால நிகழ்ச்சியாகிவிட்டது.

1986 இல் மாற்று அரசியல் சக்திகளை தடைசெய்து அவ் இயக்கங்களின் தலைவர்களையும், உறுப்பினர்களையும் படுகொலை செய்ததன் மூலம் மக்களுக்கு போராட்டத்தின் மீது இருந்த ஈடுபாட்டை புலிகள் தகர்த்தெறிந்தனர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக புலிப்பாசிச சிதைவியக்கம் உருப்பெருத்தது. அது ஒரு பிணியாக இச் சமூகத்தில் உருப்பெற்றது. கடந்த இரண்டு தசாப்தங்களில் அது இந்த சமூகத்தை அரித்தழித்து வந்த காலத்தை தமிழீழ போராட்ட காலம் என தமிழ் முட்டாள் பாமரர்கள் சொல்லிவந்தனர்.

இந்த வரலாற்று மோசடிக்கென பெருந்தொகையான தமிழ் இளைஞர், யுவதிகளும், சிறுவர், சிறுமியரும் அநியாயமாக பலிகொள்ளப்பட்டனர். போராட்டத்திற்கு உரமேற்றுவதாகக் கூறி வடக்கு முஸ்லீம்களை உடுத்த துணியுடன் வெளியேற்றியது மாத்திரமல்லாமல் கிழக்கின் பள்ளிவாசல்களிலும் படுகொலைகளை அரங்கேற்றினார்கள்.

வடக்கு-கிழக்கின் பல்வேறு பாகங்களிலும் துரோகிகள் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான தமிழர்களை படுகொலை செய்தார்கள். இவர்கள் தமிழீழ போராட்டம் நடத்துகிறோம் பேர்வழிகள் என்று சொல்லி பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு மரணத்தையும், உடைமை இழப்பையும் ஏற்படுத்தினார்கள். மக்களின் இழப்புக்கள் விடுதலைப் போராட்டத்தின் உரம் என்றார்கள்.

பேருந்துகளில் பயணம் செய்யும் சாதாரண சிங்கள மக்களை குறிவைத்து நடத்தும் தாக்குதல்கள் மூலம் இனக்கலவரங்கள் ஏற்பட்டு அதனால் தமிழர்களுக்கு பாரிய அனர்த்தங்கள் ஏற்படாதா என அங்கலாய்த்தார்கள்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உதவ வந்த மாபெரும் ஜனநாயக இந்தியாவின் உதவியை அலட்சியம் செய்தது மாத்திரமல்லாமல் இந்திய அமைதி காப்புப் படைக்கு எதிராக போர் ஒன்றைத் தொடுத்து தமிழர்களின் மாபெரும் நட்புக்கு பங்கம் ஏற்படுத்தியது மாத்திரமல்லாமல் பெரும் அனர்தங்களுக்கும் வழிவகுத்தார்கள். அவர்கள் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இளந்தலைவர் ராஜீவ்காந்தி அவர்களை படுகொலை செய்யுமளவிற்கு சென்றார்கள்.

தமிழர்களின் அத்தனை கீர்த்திவாய்ந்த தலைவர்களையும் கல்விமான்களையும் அழித்தொழித்து தமிழர்களை வேகமாக நடுத்தெருவிற்கு அழைத்து வந்தார்கள்.

இறுதியாக 2004 இல் கிழக்கில் புலிகளின் உள்ளேயே எழுந்த ஜனநாயகக் கோரிக்கையை, ஜனநாயகக் குரலை உடல் மீதியின்றி அழித்தல் என்பதன் மூலம் புலிகளின் வல்வெட்டித்துறை தலைமை செயற்படுத்த முனைந்தது. இதன் விளைவு கிழக்கில் புலிகளின் ஆதிக்க நிலையில் தளம்பல்களை ஏற்படுத்தியது. தற்போது பாரிய சரிவுகளை நோக்கி அதனை இட்டுச்சென்றுள்ளது.

புலிகளுக்கு ஏற்பட்டு வரும் இச் சரிவுகள் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. ஏற்கனவே 1995 இல் யாழ் குடாநாட்டில் இருந்து புலிகள் முற்றுமுழுதாக விலகி வன்னிக்கு செல்ல நேர்ந்ததை இங்கு குறிப்பிடலாம். வன்னிக்குச் செல்லும் போது யாழ் குடாநாட்டு மக்களையும் வன்னிக்குச் செல்லுமாறு அவர்கள் பலவந்தப்படுத்தினர். ஆனால் தென்மராட்சியை அரச படையினர் கைப்பற்றிய பின் மக்கள் வலிகாமத்திற்கு மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றதே வரலாறு.

இப்போதும் மூதூர், சம்பூர், ஈச்சிலம்பற்றை, வெருகல், கதிரவெளி, வாகரை என இடம்பெயர்ந்த மக்களை கேடயமாக வைத்துக் கொண்டே சண்டையை நடத்தினார்கள். இறுதியில் மக்கள் முற்றுமுழுதாகவே மட்டக்களப்பு வடக்கு அரச கட்டுப்பாட்டு பகுதியினுள் இடம் பெயர்ந்து வந்துவிட்டார்கள்.

ஒரு பாசிச இயக்கம் மாற்று இயக்கங்களை, சகோதர சமூகங்களை, நட்பு நாடுகளை சகித்துக்கொள்ளாத, அன்றாடம் கொலையும் கப்பமும், சமூக சூறையாடலும், கடத்தலும் என செயற்படும் இயக்கம் வரலாற்றில் நீடித்து நிலைப்பதில்லை. என்றோ ஒரு நாள் அது மிக மோசமான வீழ்ச்சிகளை சந்திக்கும். சமகால உலகில் இது சகித்துக்கொள்ள முடியாததும். காலாவதியுமான ஒன்றுமாகும்.

உலகின் எந்த தாரதம்மியமிக்க சுதந்திர இயக்கமும் மனித குலத்தின் மீது பேரன்பும், கண்ணியமான சமூக உறவுகளையும் கொண்டிருந்ததை நாம் வரலாற்றில் பார்த்திருக்கிறோம்.

ஆனால் சமூக அக்கறையில்லாத பிரக்ஞை இல்லாத அதற்கு எதிர்நிலையாக செயற்படும் தமது சுயநலமொன்றே குறியாக செயற்படும் அதிகார அகங்கார ஸ்தாபனங்கள் வரலாற்றின் குப்பைக் கூடையினுள்ளேயே வீசப்பட்டிருக்கின்றன.

தற்போது ஏகபிரதிநிதித்துவ மாயை தகர்ந்து வருகிறது. இனிமேல் சர்வதேச அரங்கில் சென்று கதையளப்பதற்கான சந்தர்ப்பங்களும் கானல் நீராகிச் செல்கின்றன.

புலிகளின் முகவர்களான தமிழ் தேசிய கூட்மைப்பினர் வேறு உயர்ந்த ஜாதி குதிரைகளை தேட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## மனிதாபிமான நெருக்கடி

வாகரை, கதிரவெளி என சரமாரியான சரிவுகளை சந்தித்துள்ள புலிகள் தமது ஆத்திரத்தை தற்போது யாழ் குடாநாட்டு மக்கள் மீது காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். ஏற்கனவே தம்மை விட்டு ஏகிய கிழக்கு மக்கள் மீதான கோபத்தை யாழ் குடாநாட்டு மக்கள் மீது காட்டத் தலைப்பட்டிருக்கிறார்கள். மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் மக்களுக்கு உணவு, மற்றும் மருந்து பொருட்களை பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கிக் கொண்டிருந்த "சிட்டி ஒப் லிவர் பூல்" கப்பல் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் எத்தகைய மக்கள் விரோதிகள் என்பதை அம்பலப்படுத்தியிருக்கிறார்கள். பிரபாகரனின் கொற்றமும் குடையும் வாழ யாழ் குடாநாட்டு மக்கள் பட்டினி கிடந்து சாக வேண்டுமென்று எதிர்பார்க்கின்றார்கள் போலும்.

இந்தியாவிலிருந்து உணவுப் பொருட்கள் வரக்கூடாது, தெற்கிலிருந்தும் கப்பல் மூலம் உணவுப் பொருட்கள் வரக்கூடாது, ஐரோப்பிய நாடுகளின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு வடக்கு கிழக்கில் செயற்படக்கூடாது, சிறுவர் சிறுமியரை தொடர்ந்து போர் முனைகளில் நிறுத்துவோம், அவர்களை வெடிகுண்டுகளாக மாற்றுவோம், சிவிலியன்களின் பேருந்துகள் மீது கிளேமோர் தாக்குதலும், எறிகுண்டுத் தாக்குதலும் நிகழ்த்துவோம், முஸ்லீம்களை அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்களை விட்டே வெளியேற்றுவோம் என்ற புலிகளின் திடசங்கற்பம் மக்கள் சார்பானதா அல்லது மக்கள் விரோதமானதா என்பதை பகுத்தறிவுள்ள தமிழர்கள் சிந்திக்க தலைப்பட வேண்டும்.

தமிழீழ போராட்டம் நடத்துகிறோம் பேர்வழிகள் என்று சொல்லி உள்ளூர் தமிழர்களும், சர்வதேசம் வாழ் புலம் பெயர்ந்த தமிழர்களும் தேடிய தோட்டங்கள் எல்லாவற்றையும் கடந்த இரண்டு தசாப்தங்களாக சூறையாடி தமிழர்களின் தலைவர்களையெல்லாம் கொன்றொழித்து இன்று நடுத்தெருவில் தமிழர்களை பிச்சா பாத்திரத்துடன் நிறுத்தியிருக்கும் புலி களை இனிமேலும் தமிழர்கள் ஆதரித்து தங்களுக்கு தாங்களே குழிபறிக்கும் வேலையை செய்யப் போகிறார்களா என்பதை அறிவின் வெளிச்சத்தில் ஒரு தடவை ஆறஅமர இருந்து சிந்திக்க வேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் விசாலித்த பார்வையின் அவசியம்

இலங்கையில் அதிகாரப் பகிர்வின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பெரும்பான்மை நிபுணர்குழு, அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண ஆகியோரின் அறிக்கைகள ஆக்கப்பூர்வமான உள்ளடக்கங்களை கொண்டிருப்பினும் இதுவிடயத்தில் இலங்கையின் ஜனநாயகத்தையும் பல்லின இலங்கையையும் கனவு காணும் அனைத்து அரசியல் சமூக சக்திகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் குறைந்தபட்ச அடிப்படையாக இருக்கக்கூடிய இந்த யோசனைகள் தொடர்பாக விரோதங்களும், வன்மங்களும் வெளிப்படுத்தப்படுவதுதான் இங்கு அவலமானது. தமிழர்கள் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக பாராபட்சமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள். நிலம், மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, பண்பாடு போன்ற அனைத்து துறைகளிலும் இனரீதியான பாராபட்சங்களை சந்தித்திருக்கிறார்கள். இதுவே கடந்த கால் நூற்றாண்டுகளில் வன்முறை, யுத்தமாக எழுவதற்கு வழிவகுத்தது. பல்லாயிரக் கணக்கான உயிர்களும், உடைமைகளும் அழிவதற்கான சூழ நிலையை ஏற்படுத்தியது. தமிழ், சிங்கள, மலையக, முஸ்லீம் என அனைத்து மக்களும் வெவ்வேறு அளவுகளில் இந்த கால்நூற்றாண்டு கால அழிவுகளை சந்தித்திருக்கிறார்கள்.

இந்த யுத்தம் தமிழ் சமூகத்தில் புலிகளை ஒரு பாசிச சக்தியாக உருவாக்கியது. அது தன் பங்கிற்கு சமூகத்தின் சமூக பொருளாதார கலாச்சார விழுமியங்களையும் அரித்தழித்து வந்திருக்கிறது.

இன்று வடக்கு கிழக்கில் குறிப்பாகவும், நாட்டில் பொதுவாகவும் ஒரு அமைதியற்ற நிலை மக்கள் மனங்களில் கலவரமான ஒரு மனோ நிலை நிலவுகிறது. தற்போதைய பிரச்சினைகள் தீர்ந்து அமைதியான சூழ்நிலையொன்று நாட்டில் நிலவ வேண்டுமென அனைத்து இன மக்களுமே பேரவா கொண்டுள்ளனர்.

மக்களின் இந்த அபிலாசையை இந்த நாட்டில் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும், சமூக பொருளாதார அபிவிருத்தியையும் நேசிக்கும் அரசியல் சமூக சக்திகள் புரிந்துகொள்ள தலைப்பட வேண்டும்.

இன மோதல் தொடர்ந்து செல்வதால் நாம் ஆக்கபூர்வமான பாதையில் சில அடிகளைக்கூட முன்வைக்க முடியாத நிலையில் இருக்கிறோம்.

பல்லினங்களின் தேசமாக இலங்கையை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை இடுவதன் மூலமே சகல அடிப்படைவாத சக்திகளையும தோற்கடிக்க முடியும். ஜனநாயக சக்திகளை பலப்படுத்த முடியும். சமகால நாகரீக உலகத்துடன் இந்த நாடு ஒத்தோடுவதாக இருந்தால் சமூகங்களிடையே அதிகார பகிர்ந்தளிப்பு முதல் நிபந்தனையாகிறது.

நாளும் பொழுதும் மரணமும், அகதி வாழ்வும், கடத்தல்களும், சித்திரவதைகளும் என திரும்பத்திரும்ப எமது செய்தி ஊடகங்களில் இடம் பெற்று எமது மனங்கள் பேதலித்துப்போய் கிடக்கின்றன.

விஞ்ஞான கண்டுபிடிப்புக்களாக இருந்தாலும், பொருளாதார அபிவிருத்தித் திட்டமிடல்களாக இருந்தாலும், ஜனநாயகம் மனித உரிமை நல்லாட்சி பற்றிய கருத்துருக்களாக இருந்தாலும் மனிதர்களின் நல்வாழ்வை முன்னிறுத்தியே பேசப்படுகின்றன. மனித அழிவு என்பது அதற்கான இயக்கம் என்பது இதற்கு நேர் விரோதமானது. மனித குலத்திற்கே எதிரியானது.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகள் இனப்பிரச்சினை தீர்வுக்கான அடித்தளங்களாக அமையமுடியும். ஆனால் அது விசாலிப்பதற்கான மேலும் செழுமைப்படுத்தப்படுவதற்கான இடைவெளியை கொண்டிருக்க வேண்டும்.

அதிகார பகிர்ந்தளிப்பிற்கான முயற்சிகள் வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அவை பெரும்பாலும் இழந்துவிட்ட சந்தர்ப்பங்களாகவே பல தடவை காணப்பட்டிருக்கின்றன.

மாகாண ஆட்சிமுறை 1987 இல் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின் வடக்கு -கிழக்கிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சட்ட ஏற்பாடுகள் நெறிமுறைகளுக்கு அப்பால் மத்தியை நோக்கி நகர்த்தப்பட்டன. மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் அதன் பிராந்திய அதிகாரங்கள் அனைத்துமே மத்திக்கு கொண்டு செல்லப்பட்டன. கல்வி, உள்ளூராட்சி, சுகாதாரம், போக்குவரத்து, வரிவிதிப்பு, வேலைவாய்ப்பு, நிலம் தொடர்பில் நிறையவே இத்தகைய அதிகாரபகிர்வு நெறிமுறைகளுக்கு எதிர்நிலையான மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன.

தற்போது வடக்கு-கிழக்கு மாகாணம் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் பிளவுபடுத்தப்பட்டது. வடக்கு கிழக்கில் இரண்டு மாகாணங்களுக்கான நிர்வாக நடைமுறைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. திருமலைக்கென பிரத்தியேகமான நிர்வாகமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1987 இன் பின்னர் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் அர்ப்பணிப்பில் மாகாண அரச கட்டமைப்பு ஒன்று திருமலையை தலைநகரமாகக் கொண்டு வடக்கு -கிழக்கில் ஏற்படுத்தப்பட்டது. புலிகள் இத்தகைய அதிகாரப் பகிர்வு கட்டமைப்பொன்று நிறுவப்படுவதற்கு எதிராக சர்வநாச செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தபோதும் அன்று ஜனாதிபதி பிரேமதாசா அவர்களின தலைமையிலான அரசு மாகாணங்களின் அதிகாரங்களை பறித்து அதனை அர்த்தமிழக்க செய்ய செயற்பட்டபோதும், இத்தகைய பொது சதிகார நலன்களுக்காக புலிகளும் பிரேமதாசா அரசும் இணைந்து செயற்பட்டபோதும் ஐக்கிய இலங்கைக்குள் பிராந்திய அதிகார கட்டமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அற்ப ஆயுளிலேயே அது தகர்க்கப்பட்டது. 17 ஆண்டுகளின் பின்னர் இன்று வடக்கு- கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டும் விட்டது.

எனினும் இந்த 17 ஆண்டுகளில் எழுந்த சூழ்நிலைகள் எவற்றையும் கருத்திற்கெடுக்காமல் நாங்கள் விடயங்களை ஆராயப்போவது முறையல்ல. 1990 இன் பிற்பகுதியிலேயே வடக்கு முஸ்லீம் மக்கள் தமது சொந்த பிரதேசங்களை விட்டு துரத்தியடிக்கப்பட்டார்கள். இன்றுவரை அவர்கள் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத வேதனைகளுடனும், துன்பங்களுடனும் பெரும் பகுதி புத்தளத்திலும், அனுராதபுர மாவட்டத்திலும சிதறுண்டு அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் சமூகத்திலேயே மாற்று அரசியல் சக்திகளை ஒடுக்கிய புலிகள், சகோதரர்களாக வாழ்ந்த சமூகங்களை அவர்களை துரத்திய புலிகள் எமது அயல்நாடான மாபெரும் ஜனநாயக நாடான இந்தியாவுடனான உறவிற்கும் களங்கம் கற்பித்தார்கள். அவர்கள் பிராநதிய ரீதியாக கிழக்கு மக்களின் மீது மேற்கொண்ட பாராபட்சமான நடவடிக்கைகள் ஒடுக்குமுறைகள் 2000ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் கிழக்கின் ஜனநாயக கோரிக்கையாக வெடித்துக்கிளம்பியது.

இந்த நாட்டில் எண்ணிக்கையில் பெரும்பான்மை என்ற நிலையில் இருந்து உருவான மேலாதிக்கம் ஒருபுறம். அதன் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுவதாக கூறிக்கொண்ட சமூகத்தின் உள்ளேயே உருவான அடக்குமுறை பாசிச ஸ்தாபனம் ஆகிய இவற்றுக்கிடையே மனித வாழ்வு சிக்கி சீரழிந்து கொண்டிருக்கிறது.

தற்போதைய வித்தியாசமான நிலைமைகள் சமூகத்தின் அனைத்து மட்டத்திலும் அனைத்துவகையான ஒடுக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயகத்தை முன்னிறுத்தி நிற்கிறது.

இங்கு ஒவ்வொரு பிரச்சினையும் உணர்ச்சியும், உணர்வும் [illegible] முஸ்லீம் மக்களை பொறுத்தமட்டில் வடக்கு - கிழக்கில் அவர்கள் தங்களை தாங்களே நிர்வாகம் செய்யக்கூடிய அதிகார கட்டமைப்பொன்றின் அவசியம் வரலாற்றின் தவிர்க்க முடியாத அவசியமாக மேலெழுந்துள்ளது. முஸ்லீம் மக்கள் கடந்த கால்நூற்றாண்டு காலத்தில் அனுபவித்த துனபங்கள் இன்னல்களில் இருந்து அத்தகைய கட்டமைப்பொன்றின் தேவை ஐயம் திரிபற உணரப்படுகிறது. முஸலீம் மக்களின் உரிமைகளுக்கான ஜனநாயக இயக்கங்களும் இக்கால கட்டத்தில்தான் உருப்பெற்றன என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

இதேபோல் கிழக்கில் வடக்கின் மேலாதிக்கத்தால் சமூக பொருளாதார ரீதியாக ஒடுக்கப்படுகிறோம் என எண்ணும் தமிழ் மக்களின் சந்தேகங்களை போக்குவதற்குமான நடைமுறைகள் உருவாக்கப்பட வேணடும்.

சிங்கள மக்களை பொறுத்தவரை அவர்கள் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் பாதுகாப்பாக வாழ முடியாது என சிந்திப்பதில் பொருத்தப்பாடின்மையொன்று காணப்படுகின்றது. இங்கு புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என அணுகும் பக்குவம் வேண்டும்.

சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இந்த நாட்டில் ஐக்கியமாக இணைந்து கலந்து வாழ்வதற்கு சிறுபான்மை சமூகங்கள் தயாராக இருக்கும் போது இந்த நாட்டினுள் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் அதிகாரப் பகிர்வு அலகினுள் சிங்களவர்கள் வாழ முடியாது என சிந்திப்பது பேரினவாத நோயின் வெளிப்பாடும், பிரிவினை வாத சக்திகளை ஊக்குவிப்பதுமாகும்.

பாரம்பரியமாக வடக்கு - கிழக்கில் வாழும் சிங்கள மக்களின் நல உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஆனால் இனப்பிரச்சினை வரலாற்றில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழர்களை முஸ்லீம்களை அவர்களின் பாரம்பரியமான வாழ்விடங்களில் சிறுபான்மையினராக்க எடுத்த முயற்சிகளை புறக்கணித்துவிட முடியாது. இது இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறுகாலகட்ட பேச்சுவார்த்தைகளில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சில தேசிய அரசியல் கட்சிகளின் தேர்தல விஞ்ஞாபன அறிக்கைகளிலும் இடம பெற்றிருக்கிறது.

சிங்களத்துவ, தமிழ்த்துவ குறுகிய மனோநிலைகளுக்கு இடமளியாமல் இலங்கையர் என்ற ரீதியில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு முயல வேண்டும். பிரிவினையை எதிர்ப்பவர்கள் என்று கூறிக்கொள்பவர்களில் ஒரு பகுதியினர் தங்களை இலங்கையர்கள் என்று எண்ணாதது துரதிஷ்டமானதாகும். அதேபோல் பிரிவினை ஆதரிப்பவர்கள் சமூகங்கள மீது பகைமை பாராட்டும் அவற்றின் இருப்பை நிராகரிக்கும் வகையிலேயே சிந்திக்கிறார்கள். இங்கு சேர்ந்து வாழ்தல், வெவ்வேறு சமூகங்களின் சுயமரியாதை கௌரவத்தை ஏற்றுக் கொள்ளுதல் எனபதனூடாகவே இலங்கை ஒரு தேசமாக பரிணமிக்க முடியும்.

வடக்கு-கிழக்கில் சமூகங்களின் தனித்துவம் உாிமைகள் பற்றி பேசும் போது நாடு முழுவதும் வெவ்வேறு பிராந்தியங்களில் சிறுபான்மையாக இருக்கும் மக்களின் உரிமைகள் பற்றி கவனம் செலுத்தாமல் விடுவது நியாயமானதல்ல.

எனினும் குறிப்பாக மலையக தமிழ் மக்களின் தனித்துவம் அவர்களின் அரசியல் சமூக, பண்பாட்டு உரிமைகள் தொடர்பான சில அம்சங்கள் திஸ்ஸ விதாரண அவர்களின பரிந்துரைகளில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தகுந்த விடயமாகும். இலங்கையை ஜனநாயகமயப்படுத்துவதில் பல்லினங்களின் தேசமாக மிளிரச் செய்வதில் மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஆழமானதும் தொலைநோக்கானதுமான பார்வை தேவை.

வன்முறைகள், சமூக மேலான்மைக்கான முஸ்தீபுகளை தவிர்த்து இந்த நாட்டில் அனைத்து இன சமூகங்களும் இணைந்து வாழ்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் அதிகூடிய கரிசணை அவசியம்.

அந்த வகையில் பெரும்பான்மை நிபுணர் குழுவினதும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களது அறிக்கைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவையும் வரலாற்றில் இழந்து விட்ட சந்தர்ப்பங்களாக போய்விடக் கூடாது.

**அகதிதமிழன்**

# மனக்கிலேசம் கொண்ட புலிகள் இராஜதந்திரிகள் மீது தாக்குதல்

## ஈ.பி.ஆர்.எல்.எவ்-பி அறிக்கை

மட்டக்களப்பிற்கு ஐ.நாவின் பிரதிநிதியும், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், யப்பான், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் ராஜதந்திரிகளும் பிரயாணம் செய்த ஹெலிகொப்டர் மீது புலிகள் நடத்திய தாக்குதலை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா வன்மையாகக் கண்டிக்கிறது.

வடக்கு-கிழக்கில் அதிகரித்துவரும் மனிதாபிமான நெருக்கடிகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் பெரிதும் கவலைகொண்டுள்ளது. தனது கரிசனையை, அக்கறையை வெளிப்படுத்தி வந்தது. யுத்தத்தினாலும். சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட இலங்கையின் அனைத்து சமூகங்களின் நலன்சார்ந்து அண்மைக காலங்களில் சர்வதேச சமூகம் பெரிதளவிலான உதவிகளை வழங்கி வந்திருக்கிறது.

தற்போது கிழக்கில் பெரிதளவிலான புனர்வாழ்வு புனர்நிர்மாண- அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் பற்றி ஆய்வு செய்வதற்கே ராஜதந்திரிகள் அங்கு சென்றிருந்தனர். ஆனால் பொதுமக்களுக்கு, மருந்து அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்லும் கப்பல்களை தாக்குபவர்கள் புலிகள். அத்தகைய மனிதாபிமானப் பணிகள் தொடர்பில் எத்தகைய பாதுகாப்பு உத்தரவாதத்தையும் வழங்க முடியாது என இடையறாது மிரட்டல் விடுபவர்கள் அவர்கள்.

இந்தியாவிலிருந்தோ தென்னிலங்கையிலிருந்தோ வர்த்தகர்கள் கூட பொருட்களை கொண்டு செல்வதை விரும்பாதது, மாத்திரமல்ல அவ்வாறு கொண்டுசெல்ல நினைத்தாலே கொலை செய்பவர்கள் அவர்கள். புலிகளின் மனிதாபிமானப் பணிகள் தொடர்பான அக்கறை என்பது வெகுஜன விரோதமானதே. அந்த நிலையில் கிழக்கில் மனிதாபிமானப் பணிகளும் அபிவிருத்திப் பணிகளும் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் முழுவேகத்தில் முன்னெடுக்கப்பட்டு விடுமோ என்ற அங்கலாய்ப்பிலும், மனக்கிலேசத்திலுமே புலிகள் ராஜதந்திரிகள் பயணம் செய்த ஹெலிகொப்டர் மீது தாக்குதல் நிகழ்த்தினார்கள்.

ஜனங்களை எப்போதும் பீதியிலும், வறுமையிலும், அகதிவாழ்விலும் வைத்திருப்பதும் அன்றாடம் மரணமும், அனாதரவும் என்ற நிலையை பராமரிப்பதே புலிகளின் மனப்பான்மையாகும். மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பமுடியாது. எமது பயங்கரவாதத்தை மீறி யாரும் கிழக்கின் மக்களுக்கு உதவிட முடியாது என்பதே புலிகள விடுக்கும் செய்தியாகும். இச்செய்தியை இட்டு பணிந்து போவது புலிகளின் பாசிச பயங்கரவாதத்தை அலட்சியப் படுத்துவதாக அமையும். புலிகளின் அவாக்கள் பயங்கர வாதத்தின் அடிப்படையிலானவை. தமிழ் மக்களின் அபிலாசை ஜனநாயகம், மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டது.

இராஜதந்திரிகள் தெய்வாதீனமாக புலிகளின் பயங்கரவாதத் தாக்குதலிலிருந்து உயிர்தப்பியது ஆறுதலான விடயம். இந்த காட்டுமிராண்டி நடவடிக்கை தொடர்பாக புலிகள் சொல்லும் பொய்கள் தான் அருவருப்பானவையாக காணப்படுகின்றன. ராஜதந்திரிகளை இலங்கை அரசு யுத்த மண்டலங்களுக்குள் கொண்டு வந்தது, அதனை தமக்கு முன்கூட்டியே தெரிவிக்காதது பொறுப்பற்ற செயலென நாடகமாடுகிறாகள். தாம் ஏதோ தார்மீக நெறிமுறைகளை கடைப்பிடிப்பவர்கள்போல அவர்கள் பாசாங்குசெய்கிறார்கள்.

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதும் தமிழ் மக்களுக்கும், இலங்கையின் பிற தேசிய சமூகங்களுக்கும் அதிகாரப் பகிர்ந்தளிப்பை மேற்கொள்வதும் மனிதாபிமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதும் இருவெவ்வேறு முன்னுரிமை அளிக்க வேண்டிய பணிகள் என்பதை இங்கு நாம் சர்வதேச சமூகத்திற்கு தயவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.


**தி. ஸ்ரீதரன்**
**பொதுச் செயலாளர்**
**ஈ.பி.ஆர்.எல்.எப் - பத்மநாபா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி

# வாழ்க்கைச் சித்திரம்

## பிஆர். நந்தாவின் நூலில் இருந்து



### தாயகம் திரும்பினார்

ஜனவரி 9, 1915இல் பம்பாயிலுள்ள அப்போல்லோ பந்தரில் காந்தி இறங்கியபோது அவருக்கு ஒரு வீரருக்குரிய வரவேற்பு காத்திருந்தது. மூன்று நாட்களுக்குப் பிறகு, பம்பாயின் செல்வந்தரான ஜெஹான்கிர் பெடிட்டின் அரண்மனை போன்ற வீட்டில பம்பாய் வாசிகள் ஒரு பிரமாதமான விருந்தளித்து அவரை கௌரவித்தனர். அவரைக் கௌரவிப்பதில் இந்திய மக்களுடன் இந்திய அரசாங்கமும் சேர்ந்து கொண்டது.

1915ஆம் ஆண்டு அரசின் பிறந்த நாள் விருதுகள் வழங்கும் பட்டியலில் அவர் பெயரும் இடம்பெற்று, அவருக்கு "கைசர்-இ-ஹிந்த்" தங்கப்பதக்கம் கிடைக்கப் பெற்றார். அவர் ஒரு பாதுகாப்பான அரசியல்வாதி என்பதற்கு, கோகலேயுடன் அவர் கொண்டிருந்த தொடர்பே உத்தரவாதமாயிருந்தது. சொல்லப்போனால், தென்னாபிரிக்காவில் அரசியல் சாசனத்திற்கு புறம்பான இயக்கங்கள் நடத்த சட்டத்தை மீறல், சிறைக்குச் செல்வது போன்ற போராட்டங்களை முன்னின்று நடத்தியிருக்கிறார்.

ஆனால் அவர் எந்த காரணத்திற்காகப் போராடினாரோ, அது எவ்வளவு அரசியலோ அவ்வளவு மனிதாபிமானமும் கொண்டதாகவும் இருந்தது. இன வெறியாலோ அல்லது அரசியல் நிர்ப்பந்தங்களாலோ மழுங்கடிக்க முடியா மனிதாபிமானம் கொண்ட எல்லா இந்தியர்களாலும், எல்லா ஆங்கிலேயர்களாலும் நேசிக்கப்படக்கூடிய ஒன்றாக இருந்தது. எப்படியாயினும் ஹார்டிங் பிரபு சத்தியாக்கிரக போராட்டத்திற்குக் கொடுத்த வெளிப்படையான ஆதரவு "பயங்கர எழுச்சி" எனும் அவப்பெயர் தென்னாபிரிக்காவில் இந்திய போராட்டத்திற்கு வராமல் தடுத்தது.

அரசியலில் குதிக்க காந்தி அவசரப்படவில்லை. இந்திய அரசியல் களத்தில், கோகலேதான் அவரது ஆசான். கோகலே முதற்காரியமாக, ஒரு வருடம், பயிற்சியிலிருக்கும் ஒரு வருடமாகக் கொண்டு, பொதுப் பிரச்சினைகள் பற்றி கருத்துக்கள் கூற மாட்டேன் எனும் வாக்குறுதியை காந்தியிடமிருந்து வாங்கினார். பூனாவிலுள்ள இந்திய சேவகர்கள் சங்கத்தில காந்தி சேர வேண்டுமென்பதில் கோகலே மிகுந்த அக்கறை காட்டினார். கோகலேயின் விருப்பத்துடன் ஒத்துப்போக காந்தியும் உடன் இணக்கமாக இருந்தார்.

ஆனால் சங்க உறுப்பினர்கள் பலரும் சங்கத்தின் கொள்கைகள், செயல்கள் இவற்றிற்கும், காந்தியினுடையதிற்கும் பெருத்த இடைவெளி இருப்பதாக அஞ்சினர். அவரை இந்திய சேவகர்கள் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளும் பிரச்சினை பற்றிய விவாதம் நடந்துக்கொண்டிருக்கும் போது, காந்தி தனது சொந்த ஊர்களான போர்பந்தர், ராஜ்கோட்டிற்கு சென்றுவிட்டு அங்கிருந்து கவி ரவீந்திரநாத் தாகூரின் உலக சமுதாய சர்வகலாசாலையான மேற்கு வங்காளத்திலுள்ள சாந்திநிகேதனுக்கும் சென்றார்.

கோகலே இறந்துவிட்டார் என்ற செய்தியைத் தாங்கிவந்த ஒரு தந்தியால், அவரது சாந்திநிகேதனப் பயணம் திடுதிப்பென எதிர்பாராவிதமாய முடிந்தது. கோகலே இறந்த துக்கத்தை அனுஷ்டிக்கும் விதமாக அவர் ஒரு வருடம் வெறுங்காலுடன் நடந்தார். தனது ஆசானின் நினைவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்திய சேவகர்கள் சங்கத்தில் இடம் கேட்டு மறுபடியும் முயற்சித்தார். இந்த விஷயதத்தில், சங்கத்தில் தீவிர கருத்து வேறுபாடுகள் நிலவுவதைக் கண்டுவிட்டு, இடம் கேட்கும் தனது மனுவைத் திரும்பப் பெற்றார்.

1915-இல் தான் பயிற்சியில் ஈடுபட்ட வருடம் அரசியலை காந்தி அறவே ஒதுக்கினார். அவர் தமது பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் இந்திய அரசியல் ஆதிக்கமிக்க பிரச்சனைகளை தவிர்த்துவிட்டு, சமுதாய மற்றும் தனிமனித சீர்திருத்த விஷயங்களில் மட்டும் கவனம் செலுத்தினார். அவருடைய ஒதுங்கி நிற்கும் கட்டுப்பாடு, கொஞ்சம் தானே விதித்துக்கொண்ட மௌனத்தினாலும், கொஞ்சம் தன் மனதை தயார்படுத்திக் கொள்ளுமுன் இந்திய நிலவரத்தை புரிந்து கொள்ளும் நிலையாலும் ஏற்பட்டது.

அவருடைய அரசியல் கருத்துக்கள் இன்னும் உருப்பெறா நிலையில், தென்னாபிரிக்காவில் அவருடன் சேர்ந்து போராட்டத்தில் பங்கேற்ற உறவினர்களும், தோழர்களும் அடங்கிய ஒரு சிறு கும்பலுக்கு தங்க இடம் தேடுவதுதான் காந்தி உடனே கவனிக்க வேண்டிய பிரச்சினையாகவிருந்தது. ஒரு ஆச்சிரமத்தை அமைக்க விரும்பி அதை அகமதாபாத்திற்கு அருகில் உள்ள கோச்ரப் (Kochrab) எனும் கிராமத்தில் நிறுவினார். பின்னர், அந்த ஆச்சிரமம், சாபர்மதி நதிக்கரையிலுள்ள நிரந்தர இடத்திற்கு மாற்றப்பட்டது.

ஒரு சமயம் காந்தி ஆச்சிரமத்தை "மதஉணர்வுடன் கூடிய கூட்டு வாழ்க்கை" என விளக்கம் கூறினார். இங்கு "மதம்" என்பது பரந்த அர்த்தத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் வசிப்பவர்கள் மீது ஆச்சிரமம் எந்த வித நம்பிக்கைகளையோ அல்லது சடங்குகளையோ திணிக்கவில்லை. தனி மனித நடத்தைக்கான சில எளிய விதிகளையே விதித்து. ஆச்சிரமத்தில் அனுசரிக்கப்பட்ட உண்மை, அகிம்சை, பலனடக்கம் ஆகிய சில உறுதி மொழிகள் உலகம்



முழுவதும் நடைமுறையானவை. தீண்டாமை ஒழிப்பு, உடல் உழைப்பு, அச்சமின்மையை கடைபிடிப்பது ஆகிய மற்றவை, சாதிகள் மலிந்த உடல் உழைப்பை துச்சமாகக் கருதும் அந்நிய அரசாங்கத்தால் அடக்கி ஆளப்படும் இந்திய சமுதாயத்தின் விசித்திரமான சூழ்நிலைகளைச் சமாளிக்கும் நோக்கத்திலானவையாகும்.

இந்த எல்லா சபதங்களும் புத்திசாலித்தனத்துடனும் ஆக்கபூர்வமான வழியிலும் கடைபிடிக்கப்பட வேண்டியவை. அவை இயந்திரம் போல் செய்யக்கூடிய விதிமுறைகள் அல்ல. ஒழுக்கம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு நடைமுறை வழிகள். சாதாரணமானவையாய் தோன்[illegible] புராதானமான உணமைகளை தொண்ட அவை, மனித குலம் அறியாவிடினும், அன்றாட வாழ்வில் செல்லுபடியாகக் கூடியவை.

ஆச்சிரமத்து வாழ்வு எவ்வளவு கடினமாகவும், ஒழுக்கமுள்ளதாகவும் இருந்தது என்பதற்கு, அங்கு கடைபிடிக்கப்பட்ட சபதங்களின் பட்டியலே போதுமான அறிகுறியாகும். அது சுறுசுறுப்பாகவும் வைத்தது. ஒவ்வொருவரும் ஏதாவது கைவேலை செய்ய வேண்டும். அங்கு ஒரு நூல் நூற்பது மற்றும் நெசவு பிரிவும், ஒரு பசுமாட்டுத் தொழுவமும் பெரிய பண்ணையும் இருந்தன. கிராமவாசிகள் ஒவ்வொருவரும் தமது சாப்பாடு தட்டை தாமே கழுவினர். தமது துணிகளைத் தாமே துவைத்துக் கொண்டனர். அங்கு வேலைக்காரர்கள் கிடையாது. அங்குள்ள சூழ்நிலை மடாலயங்களைப் போல் இல்லாவிடினும், ஒரு கனிவான ஆனால் வேலைவாங்குவதில் கறாரான தந்தையின் கீழ் இருக்கும் ஒரு பெரிய குடும்பத்தை ஒத்திருந்தது.

காந்தி, "பாபு" என அழைக்கப்பட்டார். (குடும்பத்தின் தந்தை) தாய் கஸ்தூரிபாய் "பா" என அழைக்கப்பட்டார். சிறு குழந்தைகள், எண்பது வயது தாத்தாக்கள், அமெரிக்க, ஐரோப்பிய கல்லூரி பட்டதாரிகள், வடமொழி விற்பனர்கள், முழுக்க முழுக்க மதப்பற்று கொண்டவர்கள்,



மத நம்பிக்கை இருப்பது போல் பாசாங்கு செய்வோர் என்று பலதரப்பட்டோர் அடங்கிய கூட்டமாயிருந்தது. காந்தி, தனது ஒழுக்க ஆன்மிக கருத்துக்களைச் சோதித்துப் பார்க்கும் ஒரு மனித ஆய்வுகூடமாக அது இருந்தது. பெருமபாலான மக்களுக்கு குடும்பம் எப்படியோ அப்படியே அது இருந்தது. உலகத்தின் புழுதியும் சத்தமும் இல்லா புகலிடம். அது ரத்த சம்பந்தத்தினராலோ, சொத்துக்களாலோ இணைக்கப்பட்டதல்ல. பொது கருத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பமாக இருந்தது. காந்தி ஆச்சிரமத்தை நிர்வகித்தாராயினும் ஆச்சிரமத்திலும் சரி, ஏனைய தேசத்திலும் சரி அவருடைய அதிகாரம் ஒழுங்கோடு இருந்தது. ஏதாவது தவறு நடந்தாலோ, அல்ல ஆசிரமவாசி ஒருவர் ஏதாவது பெரும் தவறிழைத்துவிட்டாலோ காந்தி அந்தக் குற்றச்சாட்டைத் தனதாக ஏற்று அதற்குப் பிராயச்சித்தமாக ஒரு உபவாசத்தை மேற்கொள்வார்.

### முதலாம் உலகப் போர்

முதல்ாம் உலகப்போர் மூண்ட போது காந்தி நடுக்கடலில் இருந்தார். அவர் தாய்நாடடை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாலும் சில வாரங்கள் இங்கிலாந்தில் கழிக்க நினைத்தார். ஆகஸ்ட் 06, 1914இல் இங்கிலாந்து மண்ணில் இறங்கிய அவர் நேரத்தை வீணாக்காது, ஒரு அம்புலன்ஸ் படையை உருவாக்க தனது இந்திய நணபர்களின் கூட்டததை கூட்டினார். சாம்ராஜ்யத்திற்கு ஏற்பட்ட நெருக்கடி இந்தியாவிற்கு கிடைத்த வாய்ப்பு எனும் வாதம் அவரை கவரவில்லை. பின்னர், அவர் இவ்வாறு எழுதினார். "ஒரு இந்தியனுக்கும், ஒரு ஆங்கிலேயனுக்கும் உள்ள அந்தஸ்த்து விததியாசத்தை நான் அறிவேன் ஆனால், நாம் அடிமைகளின் நிலைக்குத் தளளப்பட்டிருக்கிறோம் என்பதை நான் நம்பவில்லை. பிரிட்டிஷ் அமைப்பைக காட்டிலும் தனிப்பட்ட அதிகாரியின் [illegible]



நான் உணர்ந்தேன். நாம், நமது அந்தஸ்த்தை ஆங்கிலேயர்களின் உதவியாலும், ஒத்துழைப்பாலும் மேமபடுத்திக் கொள்ள முடியும் என்றால், அவர்களுடைய கஷ்ட காலத்தில் அவர்களுக்குப் பக்கபலமாக இருப்பதன் மூலம் அவர்களுடைய உதவியைப் பெறுவது நமது கடமையாகும்".

அவருக்கு மார்பில் நீர் கோர்த்துக கொண்டு வலி ஏற்படாதிருந்திருந்தால் தாம் உருவாக்கிய அம்புலென்ஸ் படையில் காந்தி தொடர்ந்து பணியாற்றியிருப்பார். அவர் இந்தியா திரும்புவதும் காலவரையின்றி தாமதமாகியிருக்கும்.

அவர் இந்தியாவிற்கு வந்தபோது தேசியவாதிகளின் கருத்து, யுத்த முயற்சிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தருவதற்கு எதிராக இருப்பதைக் கண்டார். அரசியல் ரீதியாக பின் தங்கியவர்கள் அல்லது அரசாங்க ஆதரவில் கொழிப்பவர்கள் போன்றவர்களே என்னவாயினும் சரி, விசுவாசமாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒத்துழைப்புக்கு விலை வைத்து அரசாங்கத்துடன் பேரம் பேசுவதை காந்தி ஆதரிக்வில்லை. அவர் சொன்னார். இக்கட்டில் இருக்கும் சமயம் நாம் விசுவாசமாக இருக்கிறோம் என்பது ஸ்வராஜ் (சுய ஆட்சிக்கான) தகுதி தேர்வு அல்ல. விசுவாசம் என்பது ஒரு தகுதி அல்ல. உலகம் முழுமையும் குடியுரிமைக்கு அவசியமானதொன்றாகும்.

1916- 18ம் வருடங்களில் காந்தி அரசியலில் முக்கிய பங்கு ஏற்கவில்லை. இந்திய தேசிய காங்கிரஸில பிரதானமாயிருந்த இரு கோஷ்டிகளுடன் அவருடைய கருத்துக்களும், முறைகளும் சேரவில்லை. அரசியல் சாசனத்திற்கு அப்பாற்பட்ட அவருடைய சத்தியாக்கிரக முறைகள் மிதவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. போரின் போது பிரிட்டிஷ் அரசிடம் அவர், கவனமாக சிந்தித்துக் காட்டிய பிரிவு தீவிரவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர் ஹோம் ரூல் போராட்டத்திலோ, அல்லது இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் அனைத்திந்திய முஸ்லீம் லீக்கிற்கு இடையேயான லக்னோ உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளிலோ கலந்துகொள்ளவில்லை. அவர் இந்திய அரசியலின் முக்கிய நீரோட்டத்திலிருந்து தனியாக ஒதுககப்பட்டதாகத் தோன்றிது. காந்தி அன்றி, அன்னிபெஸன்ட், திலக் சேர்ந்த கூட்டணியே, தேசிய களத்தில் ஆதிக்கம் செலுத்தியது. அரசாங்கத்தை ஈர்த்தது.

1917-ல் இந்தியாவுக்கு வருகை தந்த பிரிட்டிஷ் அமைச்சரவையைச் சேர்ந்த எட்வின் மான்டேகு தனது நாட்குறிப்பேட்டில் திலகரைப் பற்றி இவ்வாறு எழுதினார். "அவ தற்போது இந்தியாவின் மிகவும் சக்திவாய்ந்த மனிதராக இருக்கக்கூடும்". காந்தியைப் பற்றி மான்டேகு இவ்விதம் குறிப்பிட்டார். "தமது சக மனிதர்களின் நிலைமையை முன்னேற்றுவதற்காக சொந்த விளம்பரத்துக்காக அன்றி அவர்களது குறைகளை கணடுபிடித்து குணபபடுத்தும் உண்மை நோக்குடன் செயல்படும் ஒரு சமூக சீர்திருத்தவாதி. அவர் ஒரு கூலியை போல் உடைகள் அணிந்து, தனது எல்லா சுகங்களையும் துறந்து மிக எளிய நடைமுறை வாழ்க்கை வாழும தூய தீர்க்கதரிசியாவார்."

போரின் போது அவர் அரசியல் போராட்டத்திலிருந்து விலகியிருக்க உறுதி பூண்டாலும், அது அவரைத் தாமதம் காட்ட முடியாத நியாயமான குறைகளுக்காகப் போராடுவதிலிருந்து தடுக்க முடியவில்லை என்பது உண்மை. 1917ன் கோடைகாலத்தில் அவர் அவுரி பயிரிடப்படும் சம்பாரான் மாவட்டத்திற்குச் சென்று அங்கு கைரோப்பிய தோட்ட உரிமையாளர்களால் அவதிக்குள்ளாயிருக்கும் குத்தகைகாரர்களுக்காகப் போராடினார். அதே வருடம், அகமதாபாத்திலுள்ள துணித் தொழிலாளர்கள் தங்களது ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக நடத்திய வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தி வைத்தார். அதற்கு அடுத்த வருடம் மழை பெய்தால் விளைச்சல் பாதிக்கப்பட்ட கைரா மாவட்டத்திற்கு சென்று நிலவரியைக் குறைக்கும்படி போராடினார்.

காந்தியின் நடவடிக்கைகள் உளளூர் அதிகாரிகளை கவலைக்குள்ளாக்கினார். ஆனால், அரசாங்கம் ஒரு நேரடி மோதலைத் தவிர்ப்பதில் ஆர்வம் காட்டியது. காந்தியும்கூட இம் மோதல்களை உள்ளூர் அளவில் வைத்துக் கொள்ள பெரும் அக்கறை கொண்டார். ஒரு தேசிய நெருக்கடியை உருவாக்காமல், தொழிலாளிகளுக்கும் குடியானவர்களுக்கும் சிறிதளவாவது நியாயம் கிடைப்பதற்கான வழிகளை அவர் தேடினார்.

1918ன் துவக்கத்தில் போர் நேச நாடுகளுக்கு சாதகமாக இல்லாதது போல் தோன்றியது. மேற்குப் புறத்தில் ஜெர்மனியின் ஊடுருவல் எதிர்பார்க்கப்பட்டது. இந்திய கருத்துக்களை பிரதிபலிக்கும் பிரதான தலைவர்களை வெஸ்ராய் டில்லியில் யுத்த மாநாட்டிற்கு அழைத்தார். படைவீரர்களை எடுக்கும் தீர்மானத்திற்கான காந்தி ஒரே இந்தி வாக்கியத்தில் ஆதரவு தெரிவித்தார். "எனது பொறுப்பினை நன்கு உணர்ந்து நான் இந்த தீர்மானத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்".

போர் கூட்டத்திற்குப் பிறகு இராணுவத்திற்கு ஆள் எடுக்கும் பிரச்சாரத்தில் காந்தி முழு மூச்சுடன் இறங்கினார். அஹிம்சையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட காந்தி, ஐரோப்பிய போர் முனைகளில் சண்டை புரியவென பிரிட்டிஷ் இந்திய இராணுவத்திற்கான போர் வீரர்களை எடுப்பதற்கென தமது சொந்த மாகாணமான குஜராத்திலுள்ள கிராமங்க



ளில் இந்த அஹிம்சைவாதி பயணம மேற்கொண்டது வேடிக்கையாக இருந்தது.

குஜராத்தில் உள்ளார்ந்த கிராமப் புறங்களுக்கு செல்லும் போது பல முறை மாட்டு வண்டிகள் கிடைக்காமல் காந்தியும் அவரது சகாக்களும் நாளொன்றுக்கு இருபது மைல்கள் நடக்க வேண்டியிருந்தது. அளவுக்கு அதிகமான அலைச்சலை அவரால் தாங்க முடியவில்லை. முடிவில் ஒரு தீவிர வயிற்றுப்போக்கு அவரை அடித்துப் போட்டது.

இதனிடையே போர் முடிவுக்கு வந்தது. தேசதுரோக குற்ற விசாரணைக்குழுவின் அறிக்கை வெளியாகிவிட்டது என்றும், சிவில் உரிமைகளை பறிப்பதற்கான சட்டத்தை இந்திய அரசாங்கம் கொண்டுவரப்போகிறது என்பதையம் காந்தி தெரிந்துக் கொண்டார். போரின் முடிவில் ஒரு நல்லெண்ணப் போக்கு ஏற்படும் என்ற நம்பிக்கையில் பிரிட்டனுக்கு நெருக்கடியான நேரத்தில் நிபந்தனையற்ற ஆதரவு தரவேண்டும் என்று வாதிட்ட தலைவர்களில் காந்தி அனேகமாக தனித்து விடப்பட்டார். உணவுக்குப் பதில் கல்லைப் பெற்றது போலிருந்தது அவருக்கு. போர் சமயத்தில் அரசியலிலிருந்து விலகி இருக்க அவர் தன்னாலான முயற்சிகள் மேற்கொண்டார். சமாதானம் நிலவும் இப்பொழுது, இழைக்கப்பட்ட தவறுகளுக்காகப் போராடும் உணர்வை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

தொடரும்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்.

மேற்கு நாடுகளிலுள்ள இந்துக் கோயில்கள் மீது புலிகள் இயக்கத்தின் ஆதிக்கம்.

கோயில்கள் பணம் சம்பாதிக்கப்படும் இடங்கள் ஆகும். ஆகவே அதை தங்கள் கட்டுப்பாட்டுகளுள் கொண்டு வந்தால், அங்குள்ள பணத்தின் மீது அவர்களின் கட்டுப்பாடு வரும், உபரியான பணத்தை அவர்கள் கட்டுப்படுத்தலாம், அங்கு வருகின்ற மக்களை அவர்கள் கட்டுப்படுத்தலாம்.

— 2005 ஒக்டோபர், இலண்டன், இந்துக் கோயில் ஒன்றின் பரிபாலகர்.

பெரும்பான்மையான தமிழர்கள் இந்துக்கள். புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தின் அனேகமான அங்கத்தவர்களைக் பொறுத்த வரையில், இந்து கோயில்கள் அவர்களுக்கு இறை வழிபாட்டுக்கான இடமாக மட்டுமல்லாது, அவர்களின் சமூக செயற்பாடுகளுக்கான ஓர் மையமாகவும், மற்றும் அவர்களின் நன்கொடைகள், தர்ம செயற்பாடுகள் என்பவற்றுக்கு வழிசமைக்கும் ஓர் இடமாகவும் விளங்குகின்றது. டொரன்டோப் பகுதியில் இலங்கைத் தமிழர்கள் செல்லுகின்ற, நாற்பது இந்து கோயில்கள் பருமட்டாக இருக்கின்றன. இலண்டனில் 22 இந்துக் கோயில்கள் இருக்கின்றன. இவ் இந்துக் கோயில்கள் தமிழ் சமூகத்துடன் உடனடி தொடர்பினை ஏற்படுத்துவதற்கு மற்றும் நிதி சேருவதற்கு வாய்ப்பான இடமாக இருப்பதால் புலிகள் இயக்கமானது அக் கோயில்களில் நடக்கும் நிகழ்வுகள், அவற்றின் நிர்வாகம், மற்றும் அவற்றின் வருமானம் என்பவற்றின் மீது தமது கட்டுப்பாட்டை வைத்திருக்க முயற்சிக்கின்றது.




மேற்கு நாடுகளில் உள்ள இந்துக் கோயில்களின் மீது புலிகள் இயக்கத்தின் ஆதிக்கமானது மிக வெளிப்படையாகவே இருக்கின்றது. புலிகள் இயக்கத்தின் கருத்துக்களைப் பிரச்சாரப்படுத்துகின்ற வீடியோ கசட்டுக்கள் **DVD** கள், பிரபாகரனின் உரைகள் அடங்கிய **CD** கள் மற்றும் புலிகள் இயக்கத்தின் கொடிகள் என்பவை இந்து ஆலயங்களில் விற்பனை செய்யப்படக்கூடியதாக இருக்கின்றது. புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் புகைப்படங்களும் இவ்வாலயங்களில் தொங்க விடப்படுகின்றன. தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்கு என்று அல்லது ஏனைய புலிகள் இயக்க முன்னணி குழுக்களுக்கு இக் கோயில்கள் நிதியை சேகரித்துக் கொடுக்கின்றன. இலண்டனில் உள்ள ஒரு இந்துக் கோயிலில் பங்குபற்ற வந்த அனைவருமே "மாதாந்த நிரந்தர கொடுப்பனவு" (Standing Order) ஒன்றை புலிகள் இயக்கத்திற்காக கொடுக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டனர். அந்தப் பணம் பினனர் பிரித்தானிய தமிழர் சங்கத்தினால் சேர்த்து எடுக்கப்பட்டது.

டொரன்ட்டோ பிரதேசத்தில் உள்ள ஒரு இந்து ஆலயத்தின் தர்மகர்த்தா மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் கூறுகின்ற பொழுது, அண்மையில் புலிகள் இயக்கத்தினால் முடுக்கிவிடப்பட்ட நிதி சேகரிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக. 2005ன் பிற்பகுதியில் புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்கள் தனது கோயிலுக்கு பலமுறை வந்து ஒரு மில்லியன் கனேடிய டொலர்களை கேட்டார்கள். தன்னை முதல் முதலாக அணுகியவர்கள் தம்மை பொட்டு அம்மானின் (புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவுத் தலைவர்) உளவுப் பிரிவு அங்கத்தவர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டதோடு "நாங்கள் விரைவில் தமிழீழப் பிரகடனம் செய்யப் போகின்றோம். ஆகவே உடனடியாக எமக்கு நிதி தேவை" என்றனர்.

பல உள்ளூர் கோயில்களின் நிர்வாக கட்டமைப்புக்களை புலிகள் இயக்கமானது தனது கட்டுபபாட்டுக்குள் கொண்டு வருவதற்காக எவ்வாறு திட்டமிட்ட வகையில் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது என்பது பற்றி வேறு பல வழிகளிலும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. டொரன்டோவில் உள்ள இன்னும் ஒரு கோயில், எவ்வாறு "கைப்பற்றப்பட்டது" என்பது பற்றியும் அந்த பரிபாலகர் எம்மிடம் விபரித்தார். "அவர்கள் முதலில் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களை அங்கத்தவர்களாக உள்ளே நுழைத்து விடுவார்கள். பின்னர் அவர்கள் பெரும்பான்மையாகியதும், அவர்களே அக்கோயிலின் தர்மகர்த்தாவை தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்.

அவுஸ்திரேலியாவில் நடந்த ஒரு சம்பவத்தில் பேர்தீ"நசவா" என்னும் இடத்தில் அமைந்துள்ள இந்துக் கோயிலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தமது நிதி சேகரிப்பு நடவடிக்கைக்காக அதனை பாவிப்பதற்கு புலிகள் இயக்கத்தினர் முயற்சிகளை மேற்கொண்டதாக சொல்லப்படுகிறது. புலிகளின் இந்த முயற்சியானது அரசாங்கத்தின் விசாரணைகளுக்கு வழி வகுத்ததோடு, புலிகள் இயக்கத்தின் மீது அரசாங்கம் கடுமையான கட்டுப்பாட்டை வைத்திருப்பதற்கும் இச சம்பவம் ஒரு வாதமாக முன்வைக்கப்பட்டது. 2001ம் ஆண்டு பிற்பகுதியில் புலிகள் இயக்கத்தினதும், பயங்கரவாதத்தோடு தொடர்புள்ள ஏனைய பிரிவுகளினதும் சொத்துக்களை உடனடியாக முடக்குவதற்கான நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய அமைச்சர் எடுத்தார். அதைத் தொடர்ந்து அடுத்த வருடம் அவ் இந்துக் கோயிலின் நிர்வாக கமிட்டி அங்கத்தவரான சுப்பிரமணியம் முத்துலிங்கம் என்பவர், கொழும்பில் வசித்த தனது குடும்பத்தவர்களை சந்திக்கச் சென்ற போது இனந்தெரியாத இரு தமிழ் இளைஞர்களால் குத்திக் கொல்லப்பட்டார்.

இலங்கையில் அரசியல் படுகொலைகள் மிக அரிதாகவே விசாரணை செய்யப்படுகின்றன. இச் சம்பவம் தொடர்பாக குற்றவாளிகள் எவரும் இனங்காணப்படவோ, தண்டிக்கப்படவோ இல்லை. எவ்வாறாயினும் மனித உரிமை குழுக்கள் வெளியிட்ட அறிக்கையின்படி அவுஸ்திரேலியாவில் இந்துக் கோயிலை கைப்பற்றுவதற்கு புலிகள் இயக்கம் மேற்கொண்ட முயற்சியை தடுப்பதற்கு முத்துலிங்கம் வெளியிட்ட வெளிப்படையான விமர்சனங்களுக்காகவே அவர் குத்திக் கொல்லப்பட்டதாக தமிழர்கள் அறிந்திருந்தனர்.

இலண்டனில் உள்ள ஒரு தனியார் கோயிலொன்றின் பணிப்பாளர் ஜெயதேவன இராஜசிங்கம் மற்றும் அதன் செயலாளர் மற்றும் ஆறுமுகம் கந்தையா விவேகானந்தன் ஆகியோருக்கு நடந்த சம்பவமானது மிகவும் பிரபலமான செய்தியாக வந்தது. புலிகள் இயக்கத்தோடு தொடர்புடைய ஒரு குழுவிடம் அந்தக் கோயில நிர்வாகத்தை கையளிக்க ஒப்புக்கொள்ளும் வரையில், 2005 முற்பகுதியில் அவர்கள் இருவரும் இலங்கையின் வட பகுதியில் பல வாரங்களாக தடுத்து வைக்கப்பட்டனர்.

25 வருடங்களுக்கு மேலாக இங்கிலாந்தில் வாழ்ந்துள்ள ஜெயதேவன், புலிகள் இயக்கத்தினால் தடுத்து வைக்கப்படுவதற்கு முன்னர் அவ்வியக்கத்தின் மிகத் தீவிர ஆதரவாளராக இருந்தார். 1999ம் ஆண்டில் தனது மருத்துவ கவனிப்புக்காக இலங்கையை விட்டு வெளியேறி, நோர்வேக்கு செல்லுவதற்கான அனுமதியைப் பெற முயற்சித்துக் கொண்டிருந்த புலிகள் இயக்கத்தின் பிரதான பேச்சாளருமான அன்ரன் பாலசிங்கத்திற்கும், அப்போது ஜெயதேவன் உதவி செய்திருந்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் புலிகள் இயக்கத்தின் மனிதாபிமான வேலைத்திட்டங்களுக்கு என 1999 மற்றும் 2000ம் ஆண்டுகளில் அவரது கோயிலூடாகவும் நிதி சேகரிக்கப்பட்டது.

2001ம் ஆண்டு பிற்பகுதியில் பிரிட்டிஷ் அரசு புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக பெயரிட்ட பொழுது, அத்தடைச் செயற்பாடானது மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஒப்பந்தத்தின்படி சுதந்திரமாகக் கூடுவது மற்றும் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரங்களை மீறுகின்றது என்று வாதித்த, ஜெயதேவன் தானே சுயாதீனமாக அத்தடைச் சட்டத்தை, சட்ட ரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தும்படி கோருகின்ற விண்ணப்பமொன்றை பிரித்தானிய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். எவ்வாறாயினும் அவருடைய இந்த முயற்சிக்கு புலிகளின் அனுமதி கிடைக்காமல் இருந்ததோடு, அவர் பாலசிங்கத்தினதும் புலிகள் இயக்கத்தினதும் ஊடகங்களினதும் விமர்சனத்திற்கு உள்ளானார்.

தான் நிர்வகித்த இந்துக் கோயிலான ஈழப் பதீஸ்வரர் ஆலயத்தை புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக எடுத்த முயற்சியை எதிர்த்ததன் மூலம் ஜெயதேவன் புலிகள் இயக்கத்தை மேலும் சீற்றத்திற்கு உள்ளாக்கினார். இலண்டனில் உள்ள புலிகள் இயக்கத்துடன தான் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடுவதற்காக புலிகள் இயக்க தலைவர்களுடன் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பொன்றில் பங்குபற்றுவதற்காகவே 2004ம் ஆண்டு இறுதிப்பகுதியில் அவர் இலங்கையின் வட பகுதிக்கு பயணமானார். அவரும் அவருடைய சகபாடியுமான விவேகானந்தனும் அங்கு சென்ற பின்னர், ஆரம்பத்தில் அவர்கள் கிளிநொச்சியில் உள்ள புலிகள் இயக்கத்தின் விருந்தினர் விடுதியில் தங்க வைக்கப்பட்டு, சில நாட்களின் பின்னர் புலிகள் இயக்கத்தின் இன்னுமொரு கட்டிடப் பகுதிக்குள் மாற்றப்பட்டனர். "நாங்கள் மிகவும் வஞ்சகமான முறையில் ஒரு பொறிக்குள் சிக்க வைக்கப்பட்டு மிகவும் கேவலமான முறையில் தடுத்து வைக்கப்பட்டோம். இரண்டு அறைகள் மட்டும் இருந்த கைவிடப்பட்ட கட்டிடம் ஒன்றிற்குள் வைக்கப்பட்டு இருந்தோம். அக்கட்டிடமானது சிலந்தி வலைகள் நிறைந்தும், மிகவும் அழுக்குத் துணிகளுடனும், மிக அழுக்காகவும் இருந்தது. தண்ணீர் தாங்கிக்குள் ஒரு எலி செத்துக் கிடந்ததையும் நாம் கண்டோம்".

புலிகள் இயக்கத்தின் படையினர் நால்வர் அவர்களுக்கு காவல் நின்றனர். இலண்டனில் அவர்களின் செயற்பாடுகள் பற்றி பல்வேறு தருணங்களில் புலிகள் இயக்கத்தின் நிதிப்பிரிவு மற்றும் உளவுப் பிரிவு அங்கத்தவர்களால் நீண்டநேர விசாரணைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டனர். அவர்கள் தமது குடும்பத்தினரோடு எந்தவிதமான தொடர்புகளையும் வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை. மிக அடிப்படையான மருத்துவ வசதிகளே அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இலண்டனில் உள்ள கோயிலை, புலிகள் இயக்கம் குறிப்பிடுகின்ற ஓர் அமைப்பிடம் சட்டபூர்வமாக கையளிப்பதற்கு உரிய பத்திரங்களில் இருவரும் கையொப்பம் இட்டால் மட்டுமே, விவேகானந்தன் விடுதலை செய்யப்படுவார் என்று, ஆறு வாரங்களின் பின்பு ஜெயதேவனுக்கும் விவேகானந்தனுக்கும் முடிவாக கூறப்பட்டது. அவ்வாறான பத்திரங்கள் கையொப்பமிடப்பட்ட பின்னர், விவேகானந்தன் இலண்டன் சென்று கோயில் கைமாறும் நடவடிக்கைகளை நேரடியாக மேற்கொண்ட பின் ஜெயதேவன் விடுதலை செய்யப்படுவார் என்றும் அவர்களிடம் கூறப்பட்டது.

"நாங்கள் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுக்கு தமிழிலேயே கடிதங்களை எழுதினோம். எங்களுக்கு வேறு எந்த வழியும் இருக்கவில்லை. நாங்கள் விடுதலையாக வேண்டும் என்பதே எங்களின் ஒரே அக்கறையாக இருந்தது. என ஜெயதேவன் எம்மிடம் கூறினார். இக்கட்டத்தின் போது ஜெயதேவன் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தார். பெப்ரவரி 20ம் திகதி விவேகானந்தன் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர், அடுத்து வந்த 15 நாட்களும் ஜெயதேவன் முழுமையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அதனால் அவர் மருத்துவ சிகிச்சைக்காக கொண்டு போகப்பட்டார். அவர் உடனடியாக கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும் என அங்கிருந்த வைத்தியர்கள் புலிகள் இயக்கத்திடம் தெரிவித்தனர். ஆனால் தான் மீண்டும் தடுப்பு முகாமுக்கே கொண்டு செல்லப்பட்டதாக ஜெயதேவன் கூறினார்..

மார்ச் 2ம் திகதி இலண்டனுக்கு திரும்பிய விவேகானந்தன், புலிகள் இயக்கத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு அமைப்பான சிவயோகத்திற்கு கோயிலின் முழுமையான பொறுப்பை கையளிக்கின்ற ஒப்பந்த பத்திரங்களில் கையொப்பமிட்டார். கோயில் கைமாற்றப்பட்டுவிட்டதை உறுதிப்படுத்துவதற்காக அவர் புலிகள் இயக்கத்தோடு தொடர்பு கொண்டார். ஆனாலும் ஜெயதேவனின் நடவடிக்கைகள் தொடர்பாக தாங்கள் மேலதிகமாக விசாரணைகளை நடத்திக்கொண்டு இருப்பதால் அவரை தாங்கள் விடுதலை செய்யமாட்டோம் என புலிகள் இயக்கத்தினர் அவருக்கு பதிலளித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஜெயதேவனின குடும்பத்தாரும், விவகானந்தனும் இவ் விவகாரத்தை பகிரங்கப்படுத்தியதோடு இத் தடுத்து வைப்புக் பற்றி இலண்டன பொலீசாருக்கும் இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகர் காரியாலயத்திற்கும் இங்கிலாந்தில் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் மற்றும் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தினர். அதன் தொடர்ச்சியாக தொடுக்கப்பட்ட ஊடக மற்றும் அரசியல் அழுத்தங்கள் காரணமாக இறுதியாக 2005 மார்ச் 12ம் திகதி ஜெயதேவன் விடுவிக்கப்பட்டார்.

கோயிலின் உரிமையாளரும், கோயிலின் உண்மையான பரிபாலகர்கள் நால்வரும், கூட்டாக இணைந்து கோயிலின் இக் கைமாற்ற நடவடிக்கைக்கு எதிராக இங்கிலாந்து நீதிமன்றத்தினூடாக சவால் விடுத்தனர். இச் செயற்பாடானது விவேகானந்தனுக்கும் ஏனைய ஆலய பரிபாலகர்களுக்கும் பல அச்சுறுத்தல் வருவதற்கும் வழி சமைத்தது. மார்ச் 24ம் திகதி இலண்டனில் உள்ள விவேகானந்தனின் கடைக்கு வந்த ஒரு நபர், "நீங்கள் திரும்பவும் கோயிலை எடுத்துக் கொள்ளுவீர்களாயின், நாங்கள் உங்களை சுட்டுக்கொல்வோம்" என்று அவரிடம் கூறியுள்ளார். அதன் பின்னர்"ஆலய உரிமையாளருடன் நீதிமன்றத்துக்கு ஒரு சாட்சியாக நீரும் போவதாக இருந்தால், வழக்கு விசாரணையின் பொழுது நீர் சீவரட்ணம என்பவரையே ஆதரிக்க வேண்டும் (நாகேந்திரம் சீவரட்ணம் என்பவர் சிவயோகம் அமைப்பின் தலைவர் ஆவார்) நீர் அவரை ஆதரிக்காவிட்டால் உமக்கு ஓர் முடிவு கட்டும்படி புலிகள் இயக்கத்திடம் இருந்து எமக்கு உத்தரவு வந்திருக்கிறது என தனக்குக் கூறப்பட்டதாக விவேகானந்தன் மேலும் கூறினார். "நீங்கள் புலிகள் இயக்கத்தை மிக மோசமாக கைவிட்டுள்ளீர்கள். இது தொடர்பாக புலிகள் இயககம் அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. அவர்கள் உங்களைக் கவனித்துக் கொள்வார்கள்". என ஏனைய ஒரு பரிபாலகருக்கும் கூறப்பட்டுள்ளது.

2005ம் ஆண்டு ஏப்ரல் 7ம் திகதி வழக்கு விசாரணையின் போது உயர் நீதிமன்றமானது இக் கோயில் கைமாற்றமானது செல்லுபடியற்றது எனத் தீர்ப்பு வழங்கியதோடு, ஆலயத்தின் பரிபாலனத்தை அதன் ஆரம்ப பரிபாலகர்களிடமே மீள ஒப்படைத்தது. சிவயோகம் அமைப்பானது சட்ட ரீதியான கட்டணமாக 35,000 பவுண்டுகளை கொடுக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது. கோயில் மீளக் கையளிக்கப்பட்ட பின்னர் ஜெயதேவனுக்கும் ஏனைய பரிபாலகர்களுக்கும் அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள வந்தன. டிசம்பர் மாதத்தில் நடந்த ஒரு சம்பவத்தை ஜெயதேவன் கூறும் போது கோயிலுக்குள் சென்ற ஒரு நபர் கோயில் சொத்துக்களை அடித்து நொறுக்கி நாசம் செய்தார். "அவர் வெறி பிடித்தவர் போல் அறிவிப்பு பலகையை பிடுங்கி எறிந்து Traffic corn ஒன்றினால் அடித்து கதவிற்கு சேதம் விளைவித்தார். அத்தோடு தான் ஒரு கரும்புலி என்றும் எங்கள்டிஎல்லோருக்கும் நல்ல பாடம் புகட்டுவதாகவும் கூறினார்". என ஜெயதேவன் எம்மிடம் கூறினார். 2006ம் நடுப்பகுதியில், "ஜெயதேவன் தமிழர் போராட்டத்திற்கான துரோகி, அவருக்கு நல்ல பாடம் கற்பிக்கப்படும்" என தமிழில கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் கோயிலை அண்டிய குடியிருப்பு பகுதிகள் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

கோயில்களை புலிகள் இயக்கம் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர மேற்கொள்ளும் முயற்சிகளை தவிர்ப்பதற்கு சில கோயில்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளன. உதாரணமாக டொரன்டோ பகுதியில் உள்ள ஒரு பொதுக் கோயிலானது, தமது அங்கத்தவர்கள் சேர்க்கும் விடயத்தை நிறுத்தியுள்ளதோடு, யாராவது தனிநபர்கள அங்கத்தவர்களாக வர விரும்பின் அவர்கள் மூன்று வருட காலத்திற்கு தன்னார்வ தொண்டு செய்த பின்னரே அங்கத்தவர்களாக அனுமதிக்கப்படுவர் என்னும் கோட்பாட்டை வைத்துள்ளனர்.

தொடரும்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திவெளிப் பிள்ளையார் கோவில் பூசகரின் படுகொலையினூடாக புலிகள் விடுக்கும் செய்தி என்ன

58 ஆம் ஆண்டு கலவரத்தில் ஐயரை பெற்றோல் ஊற்றி எரித்ததாக தனது நான்கு வயதில் ஆவேசப்பட்டுத்தான் தமிழீழப்போராட்டத்தில் குதித்ததாக வேலுப்பிள்ளை பிரபாகரன் குறிப்பிட்டதாக ஞாபகம்.

1958 கலவரம் பற்றி தனது உறவுக்கார ஊர்ப்பெணமணி ஒருவர் தனது அம்மாவிற்கு சொல்லிக்கொண்டிருக்கையில் தன்செவியில் விழுந்து தான் கொதித்துப்போனதாக அவர் குறிப்பிடுவதை- அவர் ஞனட்பால் உண்ட கதையை புலிகளின் பரசாரக் குப்பைகளில நுகரலாம்.

ஆனால் 1958 கலவரம் நடந்து 48 வருடங்களின் பின்னர் பிரபாகரனின் திருக்கூட்டத்தினர் பூசகரைப் படுகொலை செய்யும் குரூரத்தை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

சந்திவெளிப் பிள்ளையார் கோயில் பூசகர் செல்லையா பரமேஸ்வரக் குருக்கள் இலங்கை ஜனாதிபதி வாகரையிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளான




மக்களை பார்வையிடச் சென்ற சமயம சமய சம்பிரதாயங்களுடன் ஜனாதிபதியை வரவேற்றதற்காக படுகொலை செய்யப்படடார். மூன்று பிள்ளைகளின் தந்தையான, 61 வயது முதியவரான பூசகரை ஏ.கே-47 உடன் வந்த வல்வெட்டித்துறை பிரபாகரனின் இளவல்கள் சுட்டுப் படுகொலை செய்திருக்கிறார்கள்.

அவ்வாறானால் பிரபாவிற்கு நான்கு வயதாக இருக்கும்போது அவரின் தாயாருடன் உறவுக்கார பெண்பேசியதை எவ்வாறு விளங்கிக்கொண்டார் என்ற கேள்வி, தேசியத் தலைவரின் 52 ஆம் அகவையில் தவிர்க்க முடியாமல எழவே செய்கிறது

"58 இல் சிங்கள இனவாதிகள் பெற்றோல் ஊற்றி எரித்தார்கள். எனது இளவல்கள் சுட்டுப்படுகொலை செய்தால் என்ன பூசகர்கள் குறைந்தா போய்விடுவார்கள்" இதுவா தேசியத் தலைவரின் நியாயம்?

சந்தியில் இருக்கும் காவலரணில் இருக்கும் ஆமிக்காரனுடன் தொடர்பு- ஒழுக்கங் கெட்டவள் என்று வறிய குடும்பங்களின் பெண்களை படுகொலை செய்கிறார்கள்.

இப்போது மக்களை பாதுகாக்கிறோம் பேர்வழிகள் என்று சொல்லி சனத்தை பணயம் வைத்து சண்டை நடத்தி அவர்களுக்கு மரணத்தையும், பெரும் இன்னல்களும், அவலங்களும் நேரப்பண்ணிய பின்னர் தப்பியோடிய பிரபாவின் இளவல்கள், அகதிகளாக மட்டக்களப்பு வடக்கை அடைந்திருக்கும் அகதி மக்களை பார்வையிடச் சென்ற இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சமய சம்பிரதாயங்களுடன் வரவேற்றார் என்பதற்காக ஐயருக்கு துரோகமுத்திரை இட்டு படுகொலை செய்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு இன்னும் சில விடயங்கள்-தமிழ்ச்செல்வன், பாலசிங்கம், அடேல்அன்ரி, நடேசன் வகையறாப் பரிவாரங்கள் இலங்கை வான்படை ஹெலியில் ஏறும் போது அல்லது இறங்கும்போது இவர்கள் அரசின் உபசரணையைப் பெறவில்லையா? பேச்சுவார்த்தை மேசையில் புலிகள் சொல்லும் சிங்கள அரசின் பிரதிநிதிகளுடன் கைகுலுக்கவில்லையா? கமராக்களுக்கு போஸ் கொடுக்கவில்லையா? இலங்கை விமான நிலையத்தின் முக்கிய பிரமுகர்களுக்கான வழியில் சென்று வரவில்லையா? ஒரே மேசையில் சாப்பாடு, தேனீர் உட்பட்ட உபசரணைகளைப் பெறவில்லையா? ஆனால் தமிழ்ச்செல்வனுக்கோ, புலித்தேவனுக்கோ, அடேல் அன்ரிக்கோ, அன்ரன் பாலசிங்கத்திற்கோ இதர பிரமுகர்களுக்கோ இந்த உபசரணைகளை ஏற்றுகொண்டதற்காக, பரஸ்பரம் சிரித்துக்கொண்டதற்காக பிரபாகரன் ஏன் துரோக பட்டம் சூட்டி மரணம் விளைவிக்கவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை எடுத்துச் சொன்னதற்காக அவர்கள் மேல் ஏன் கோபப்படவில்லை. அதிஷ்டமில்லாத மூன்று பிள்ளைகளின் தந்தையான அந்த ஏழைப் பூசகருக்குத்தான் அந்த தண்டனை கிடைத்திருக்கிறது பாருங்கள்.

ஏழு பிள்ளைகளின் தாயான முதிய பெண்மணியின் மரணத்தின் நியாயம் நடத்தை கெட்டவள் என்பது. ஈழத்தின சாமானிய வெளிப்படையான வறுமையில் உழலும் சாமானிய மனிதர்களுக்கு துரோகி, சமூக விரோதி, நடத்தை கெட்டவள் என்ற பட்டங்கள் சர்வ சாதாரணமாகக் கிடைக்கிறது. தமிழ் பாசிசத்தினால் தேர்ந்தெடுக்கபட்ட சில உப்பரிகை சாவுகளுக்கு மாமனிதர், நாட்டுப்பற்றாளர் பட்டம் அவ்வப்போது கிடைத்துக் கொண்டிருக்கும் போது பாவப்பட்ட ஐயருக்கு கிடைத்த பட்டத்தைப் பாருங்கள்.

தமிழீழப் போராட்டம் என்ற பெயரில மிகப்போலியான பம்மாத்து நாடகமொன்று கடந்த கால்நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது. இதில் அப்பாவிகளான சாதாரண மக்களின் வாழ்வு அன்றாடம் காயடிக்கப்படுகிறது. ஆனால சமூகச்சுரணை எதுவுமற்ற சோற்றாலடித்த பிண்டங்களான புலம்பெயர்ந்த தமிழர்களில் கணிசமானோரும், உள்ளூர் விலாங்குத் தமிழர்கள் பலரும் இதனை போராட்டம், விடுதலை என்று தம்மையும் உலகத்தையும் ஏமாற்றி



சீவியம் தளளுகிறார்கள். அவர்கள் இந்த நாட்டில் வாழும் தமிழர்களின் நலன்களுக்கு தாம் பெருங்கேடு விளைவிக்கிறோம், மாபாதகம் செய்கிறோம் என்பதை தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கிறார்கள். ஏனெனில் சொந்த சமூதாயத்தின் அழிவும் பலருக்கு வெவ்வேறு வகைகளில் வாழ்வளிக்கிறது பாருங்கள்.

செல்லையா பரமேஸ்வர குருக்களின் படுகொலை வெறுமனே பிரபாகரனின் இளவல்களால் நடத்தப்பட்டது என்று மாத்திரம கூறிப்போதல் ஆகாது. தமிழ் பாசிசத்திற்கு உயிர்கொடுக்கும் இத்தகைய பிரகிருதிகளும் இதற்கு பொறுப்பாளிகள்.

பரமேஸ்வரக் குருக்கள் ஒரு முக்கியமான கட்டத்தில் இலங்கையின் ஜனாதிபதியை சமய சம்பிரதாயங்களுடன் வரவேற்றிருந்தார்.

பல மாதங்களாக இடம்பெயர்ந்து, உயிரழிப்புக்களின் நடுவே கல்வாரி மலைக்கு சிலுவை சுமந்த யேசுவைப் போல மட்டக்களப்பு அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு இடம்பெயர்ந்து ஆயிரம் சோகங்களுடன் வந்திருந்த மக்களை பார்வையிட ஜனாதிபதி வந்திருந்த சமயம் பரமேஸ்வரக் குருக்கள் வரவேற்றார். நிச்சயமாக அவர் மனதில் ஒரு எதிர்பார்ப்பு இருந்திருக்கும். இந்த மக்கள் தமது அவலத்தை நேரடியாக எடுத்துச்சொல்ல ஒரு சந்தர்ப்பம் என்று அவர் கருதியிருக்கக் கூடும்.

எரியுண்ட யாழ் நூலகத்தை அன்றைய யாழ் நகரபிதா செல்லன் கந்தையன் அவர்களும், புலிகளால் படுகொலை செய்யப்பட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சுபத்திரன் உட்பட மாநகர சபை உறுப்பினர்கள் திறந்து வைக்க முற்பட்ட போது அதனைத் துரோகச்செயல் என்று புலிகளின் அடியாட்கள் வானத்திற்கும் பூமிக்குமிடையே குதித்து அராஜகம் புரிந்தார்கள். தமது ரவுடித்தனங்கள் அத்தனையையும் கட்டவிழ்த்து விட்டார்கள்.

ஏன் 1995 இல் யாழ்ப்பாணத்தை விட்டு புலிகள் பின் வாங்கிச் செல்கையில் மக்களையும் தம்முடன் ஆரணியம் புகுமாறு நிர்பந்தித்தார்கள் ஆனால் யாழ் குடாநாடு அரசின் முழுமையான கட்டுபாட்டுக்குள் வந்தது தான் தாமதம மக்கள் வேகமாக தத்தமது சொந்த இடங்களுக்கு திரும்பினர். இவ்வாறு தம்சொல் கேளாது யாழ்குடாநாட்டினுள் வதியத் திரும்பிய பல லட்சம் மக்களை ஓரேயடியாகவே துரோகிகள் என வைத்தார்கள்.

இப்போது சம்பூர்- மூதூர் கிழக்கு- வாகரை மக்கள் தம்மைத் துறந்ததையிட்டு அவர்கள் மனக்கிலேசம் கொண்டுள்ளார்கள். அந்த கிலேசத்தை ஐயர் மீது காட்டியுள்ளார்கள். பேரிடர், பேரவலம், மரணத்தினூடே இடம்பெயர்ந்த மக்களுக்கு ஐயரின் படுகொலையினூடாக புலிகள் மரண அச்சுறுத்தலை விடுத்துள்ளனர்.

பிரபாகரனின் மனிதாபிமானம் எத்தகையது- எத்துணை நம்பகரமானது என்பதை ஐயரின் படுகொலை உணர்த்தி நிற்கிறது.

# எமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வழிசெய்யுங்கள் மூதூர் மக்களின் வேண்டுகோள்

நாம் மூதூர் கிழக்கில் இருந்து இடம் பெயர்நது பத்துமாதங்கள் கடந்து விட்டன. ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் இழந்து எதிர்காலமே சூனியமாகத் தெரிய. ஏக்கத்துடன் ஜடங்களைப் போல் வாழ்கின்றோம். இரவோடு இரவாக இடம் பெயர்ந்த நாங்கள் எமது உடமைகள் அனைத்துமே சூறையாடப்பட்டதாக அறிகின்றோம். செல் தாக்குதலில் சேதமடைந்து எஞ்சியுள்ள வீடுகளின் கதவு. நிலை. யன்னல்கள் நாம் பார்த்து வளர்த்த மரங்கள் என்பன அபகரிக்கப்படுவதோடு கால்நடைகளும் களவாடப்படுவதாக அறிகின்றோம். இராணுவ நடவடிக்கையின்பின் மூதுார். சேருவில. போன்ற பகுதிகள் துரிதமாக குடியேற்றப்பட. மூதூர் கிழக்கு ஈச்சிலம்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசங்களை சேர்ந்த மக்களை மீழ் குடியேறறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக இப்பிரதேச மக்களாகிய எமது மனதில் அச்சத்தையும் சந்தேகத்தையும் எற்படுத்தியுள்ளன.

இதைத் தவிரவும் கடந்த 10 மாதங்களாக சொந்த வீடின்றி மரநிழலிலும். கூடாரங்களிலும் வாடிவதங்கி அடிப்படை வசதிகளின்றி பல்வேறு நோய்களுக்கும் ஏனைய துன்பங்களுக்கும் ஆளாகி தவிக்கின்றோம். அவ்வப்போது தரப்படுகின்ற உலர் உணவு நிவாரணப் பொருட்களைத் தவிர ஏமக்கு எதுவும் இல்லை. அன்றாட அத்தியாவசியச் செலவிற்கு பணமின்றி எமது குழந்தைகள் போசாக்கின்றி இருக்கின்றனர். பல்வேறு இன்னல்களுக்கு உட்பட்டு படுமோசமான மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளோம்

வாழ்வாதாரத்திற்கு வழிதேடும் நாம் இப்பிரதேசத்தில் வாழமுடியாது என்பதை முழுமையாக உணர்கின்றோம் மக்கள் பெரிய தொகையில் இடம் பெயர்ந்துள்ளதால் இப்பிரதேசத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவது முடியாதகாரியம். கடந்த 10 மாதங்களாக பல்வேறு கிராமங்களிலும். பல்வேறு முகாம்களிலும் தங்கி தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தின் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளோம். மீண்டும் வேறெந்த இடைத்தங்கல் முகாம்களுக்கும் செல்ல நாம் விருப்பவில்லை. எமது சொந்த கிரமாங்களுக்குச் செல்லவே நாம் விரும்புகின்றோம. எனவே எமது கோரிக்கையை ஏற்று நேரடியாக எமது கிராமங்களில் மீள குடியமர்த்துமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.





தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இரத்தினப்பட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org